உபகரணங்கள், பொறிகள் ஆகியன தொழிற்படும்போது அவற்றிலுள்ள சில பகுதிகள் வேறு சில பகுதிகளுடன் தொடுகையுற்றவாறே இயங்கும்.

இவ்வாறான இயக்கம் நடைபெறும் பகுதிகளில், இயக்கத்துக்கு எதிரக உராய்வு எனப்படும் நிகழ்வு நடைபெறுவதனால் அந்த இடங்களில் வெப்பமடைதல் அல்லது தேய்வடைதல் நிகழும். ஆகவே, இவ்வாறான இடங்களுக்குப் பொருத்தமான உராய்வு நீக்கிகளை இட்டு உராய்வைக் குறைக்க வேண்டும். உராய்வு நீக்கிகளாக என்ஜின் ஒயில், கிறீஸ் போன்றவற்றை இடலாம். இதன்காரணமாக உராய்வு குறைவடைந்து அந்தப் பகுதிகளை நீண்டகாலம் பயன்படுத்த முடிவதுடன் குறைந்த எத்தனத்துடன் அவற்றைத் தொழிற்படச் செய்யவும் முடியும்.

துவிச்சக்கரவண்டிச் சில்லின் அச்சானது (WheelAxel) குண்டுப்போதிகை (Ball Bearing) மூலமே சில்லுடன் பொருத்தப்பட்டுள்ளது. இவ்வாறு போதிகையை இடுவதன்மூலம் உராய்வு குறைக்கப்படுவதுடன், கிறீஸ் இடுவதன் மூலம் சில்லின் இயக்கம் மேலும் இலகுபடுத்தப்படும். மேலும், தேய்வு குறைக்கப்படும். இது தவிர இயங்கும் சில பகுதிகளுக்கு புஷ் போதிகையும் (Bush Bearing) இடப்படும்.

இயக்கத்தின்போது பகுதிகள் ஒன்றுடனொன்று மோதுகை அடைவதனாலும் உராய்வ தனாலும் அவை தேய்வடைவதுடன் அதிக ஒலியும் உருவாகும். துவிச்சக்கரவண்டியை மிதிக்கும்போது சங்கிலியில் ஒலி எழுப்பப்படல், கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள கப்பியில் ஒலி எழுப்பப்படல் ஆகியன நிகழ்வதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள்.

ஒலி ஏற்படும் இடத்திற்கு சிறிதளவு உராய்வு நீக்கி எண்ணெய் இட்டதும் ஒலி இல்லாதுபோகும். தொழிற்படச் செய்வதும் இலகுவாகும். உங்கள் வீட்டுக் கதவுப் பிணையல்கள், திறாங்கு ஆகியவற்றுக்கு சிறிதளவு எண்ணெய் இட்டு அவை இலகுவாகத் தொழிற்படும் விதத்தை அவதானியுங்கள்.



குண்டுப்போதிகை பயன்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பம்



புஷ் பயன்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பம்

மேசைத்துருவலகு வீட்டுச் சமையலறையில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் பொறியாகும். வீட்டில் பயன்படுத்தப்படும் துருவலகு பொதுவாக மனிதவலு மூலமே இயக்கப்படும். இவற்றைத் தொழிற்படச் செய்வதற்காக அச்சுடன் பொருத்தப்பட்ட கைபிடி உள்ளது. இந்த அச்சின் மறுமுனையிலுள்ள புரிகளில் துருவும் அலகு பொருத்தப்பட்டிருக்கும். மனிதனின் கைகளைத் தொழிற்பட செய்யத்தக்க வீச்சின் அளவுக்கமையவே இந்த அச்சின் நீளம் தீர்மானிக்கப்படும். அதாவது இது மானுட அளவையியலுக்கு அமைவாகவே தீர்மானிக்கப்படும்.

மின்சூள் வீட்டில் பயன்படுத்தப்படும் பொதுவான உபகரணம் ஆகும். இதிலுள்ள ஆளி இறுக்கமாக இருக்குமிடத்து அதற்கு சில துளிகள் எண்ணெய் இட்டு ஆளியை சில தடவைகள் முன்பின்னாகத் தொழிற்படச் செய்வதன் மூலமாக அதனைச் சீர்செய்ய முடியும்.

அவ்வாறே மின்சூளிலுள்ள மின்குமிழின் இழை எரிந்து போனமையால் மின்சூள் தொழிற்படாது போகலாம். (உலர் கலத்துடன் கடத்தி மூலமாக மின்குமிழை இணைத்து இதனை உறுதிசெய்து கொள்ளலாம்) அவ்வாறே, ஆளியின் பகுதிகள் மின்னோட்டம் செல்லக்கூடிய விதமாகத் தொடுகையுறாது இருக்குமாயின் அதில் படிந்துள்ள ஒட்சைட்டு, சல்பேற்று ஆகியவற்றைச் சுரண்டி அகற்றுவதன் மூலம் அதனைச் சீராக்கலாம்.

இதற்கமைய இயங்கும் பகுதிகளுக்கு உரிய காலத்தில் உராய்வு நீக்கலை மேற்கொள்வதன்மூலம் உபகரணங்களைப் பிழையின்றி நீண்டகாலம் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும். ஆகவே, வீட்டு உபகரணங்கள், பொறிகளிலுள்ள உராய்வு நீக்கல் மேற்கொள்ளப்பட வேண்டிய பகுதிகளுக்கு உரியவாறு இடையிடையே உராய்வு நீக்கலை மேற்கொள்வதன் மூலம் அவற்றின் நீடித்த பயன்பாட்டை உறுதிப் படுத்திக் கொள்ளலாம்.

அன்றாடப் பயன்பாட்டு உபகரணங்கள் மற்றும் பொறிகளின் உருவாக்கத்திற்காக பல்வேறு பதார்த்தங்களினால் தயாரிக்கப்பட்ட துணைப்பாகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. துணைப்பாகங்களுக்கு பல்வேறு பூச்சுகள், நீர், இரசாயனப் பதார்த்தங்கள் ஆகியவற்றினாலும் சூரியஒளி படுவதனாலும், உப்புத்தன்மையான காற்றின் மூலமும் பாதிப்புகள் ஏற்படலாம். இவற்றைத் தடுக்க பல்வேறு உத்திகள் பயன்படுத்தப்பட்டு அவை முடிப்பு செய்யப்பட்டுள்ளன. காலப்போக்கில் பல்வேறு காரணங்களினால் இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட முடிப்புகளிலும் பாதிப்புக்கள் ஏற்படும். நிறம் மங்குதல், துருப்பிடித்தல் போன்றன ஏற்படுவது வழமையாகும். பொறிகளின் புறமேற்பரப்பினைப் பாதுகாப்பதும் பராமரிப்பில் உள்ளடங்கும். ஆகவே, பொறிகள் மற்றும் உபகரணங்களின் புற மேற்பரப்புகள் இடையிடையே பொருத்தமாக முடிப்புச் செய்யப்பட வேண்டும்.

பல்வேறு பதார்த்தங்களுக்கான முடிப்புக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள் வருமாறு

பதார்த்தம்	முன்மினுக்கிப் பதார்த்தம்	பின்னரான மினுக்கி பதார்த்தம்
உலோகம்	• மினுக்கிக் கடதாசி • அடிப்படை நிரப்பி • துருவெதிர்ப்பு வர்ணப் பூச்சு	• எனாமல் பூச்சு • சிவிறல் பூச்சு
பலகை	• முடிப்புக் கடதாசி • மர நற்காப்பி • நிரப்பி வகைகள்	• அரக்கு • வார்ணிஷ் • பிரன்சுப் பொலிஷ் • மெழுகு வகைகள் • எனாமல் பூச்சு

வீட்டு உபகரணங்களின் பராமரிப்பின்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்

- உபகரணங்களுடன் அறிவுறுத்தற் கையேட்டில் வழங்கப்பட்டுள்ள விடயங்களை நன்கு வாசித்து அதற்கமையச் செயற்படுதல்
- உபகரணங்களைப் பயன்படுத்திய பின்னர் சுத்தம் செய்து வைத்தல்
- பளபளப்பான மேற்பரப்புக் கொண்ட பகுதிகளைச் சுத்தம் செய்யும்போது கீறலை ஏற்படுத்தக்கூடிய பதார்த்தங்களைப் பயன்படுத்தாதிருத்தல்
- இயங்கும் பகுதிகளுக்கு இடையிடையே உராய்வு நீக்கிகளை இடுதல்
- இயங்கும் பகுதிகள் இளகிக் காணப்பட்டால் உடனடியாக அவற்றை இறுக்குதல்

திருத்தியமைத்தலின்போது கவனத்திற் கொள்ள வேண்டிய படிமுறைகள்

- உரிய பாதுகாப்பு உடைத்தொகுதியை அணிந்து திருத்தியமைத்தலை ஆரம்பித்தல்
- பொறிகள் / உபகரணங்களிலுள்ள பாகங்களை நன்றாக சுத்தம் செய்தல்
- பொறிகள் / உபகரணங்களில் கீறல்கள் ஏற்படாதபோது பொருத்தமான விரிப் பொன்றின் மீது வைத்தல்
- கழற்றப்பட்ட எந்திரப்பாகங்கள் மற்றும் ஆணிகள், சுரையாணிகள் போன்றவற்றை வெவ்வேறாகப் பாதுகாப்பாக வைத்தல்
- கழற்றிய பாகங்களை டீசல் அல்லது மண்ணெண்ணெய் இட்டு சுத்தஞ்செய்தல்
- சுத்தம் செய்யப்பட்ட பாகங்களை நில விரிப்பின் மீது வைத்தல்
- பொறிகளிலுள்ள பாகங்களை நன்கு பரிசீலனைசெய்து தேய்வடைந்த உதிரிப்பாகங்களுக்கு புதியவற்றைப் பதிலீடு செய்தல்
- தேவையான இடங்களில் உராய்வு நீக்கிகளைப் பயன்படுத்தி உதிரிப்பாகங்களை மீளப் பொருத்துதல்
- சில இடங்களில் காணப்பட வேண்டிய சுயாதீன இளக்கம் உள்ள பகுதிகளை செப்பஞ் செய்தல்
- உதிரிப்பாகங்களை அடிக்கடி செயற்படுத்திப் பரிசோதித்துக் கொள்ளல்
- தேய்வுற்ற பகுதிகள் கழிவுகள் ஆகியவற்றை சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அகற்றுதல்

வீட்டு மின் உபகரணங்களைப் பயன்படுத்தும்போது கவனிக்க வேண்டியவை

மின் உபகரணங்களைப் பயன்படுத்தும்போது கவனமாக இருப்பது அவசியமாகும். மின் தாக்கம் காரணமாக காயங்கள் ஏற்படல், எரிவுகள் ஏற்படல், உயிரிழப்பு ஆகியன ஏற்படலாம். ஆகவே, வீட்டில் மின்னுடனான செயற்பாடுகளில் ஈடுபடும்போது சிறு தவறுகள் பாரிய விபத்துக்களுக்கு காரணமாக அமையலாம். இதனால் தற்காப்பு உபாயங்களைப் பின்பற்றுவது அவசியமாகும்.

இதன்போது பின்பற்ற வேண்டிய விடயங்கள்

- வீட்டு மின்உபகரணங்களில் அடங்கியுள்ள பாதுகாப்பு உத்திகள் சரியாகத் தொழிற்படுகின்றனவா என உறுதிப்படுத்தல்
- உபகரணங்களுக்கு மின்னை விநியோகிக்கும் கடத்திகளின் (Wire) காவலி உறையில் பாதிப்புக்கள் காணப்படின் மீள காவலியை இட்டு சீர்படுத்தல்

- அதனுடன் தொடர்பான மின் உபகரணங்கள் சரியான முறையில் தொழிற்படுகின்றனவா என அவதானித்து குறைபாடுகள் இருப்பின் அவற்றைச் சரிசெய்தல்

- கைகளில் ஈரலிப்புக் காணப்பட்டால் உலர்ந்த பின்னரே மின் உபகரணங்களைக் கையாள வேண்டும்

- செருகிகளை மின்முதலிலிருந்து அகற்றுவதற்கு முன்பாக மின் ஆளியை நிறுத்துதல்

மின் உபகரணங்களின் புறக்கவசத்தை அகற்றி மின்னிணைப்பை ஏற்படுத்தும்போது உரிய அறிவு கொண்ட நபரொருவரின் கண்காணிப்பின் கீழேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை கவனிக்க.

3.2 இலத்திரனியல் சுற்றுக்களை ஒருங்குசேர்ப்போம்

இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களுக்கு

- ஆக்கங்களில் பயன்படுத்த உகந்த இலத்திரனியல் சுற்றுக்களைத் தெரிவு செய்யவும்
- இலத்திரனியல் சுற்றுக்களில் பயன்படுத்தப்படும் குறியீடுகளுக்கமைய சாதனங்களைத் தெரிவு செய்யவும்
- இலத்திரனியல் வரைபடங்களுக்கமைய சாதனங்களை ஒருங்குசேர்த்து இலத்திரனியல் சுற்றுக்களை ஆக்கவும்

இயலுமாகும்.





அன்றாடம் நாம் பயன்படுத்தும் விளையாட்டுப் பொருள்களின் பெறுமதியை அதிகரிப்பதற்கு இலத்திரனியல் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டு ஆக்கப்பட்ட இலத்திரனியல் சுற்றுக்களைக் கொண்ட சோடனைகள், இயந்திரக் கட்டுப்படுத்திகள், தொடர்பாடல் கருவிகள், போரியல் நடவடிக்கைகள் போன்ற அனேக செயற்பாடுகளுக்கென சிக்கலான இலத்திரனியல் சுற்றுக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

எளிய இலத்திரனியல் சுற்றுக்களின் தொழிற்பாட்டை பல்வேறு தேவைகளுக்கென பயன்படுத்தலாம்.

இலத்திரனியல் சுற்றுக்களில் பயன்படுத்தப்படும் துணைச்சாதனங்கள்

இலத்திரனியல் சுற்றுக்களில் உள்ளடங்கிய சில சாதனங்களாக தடையிகள், ஒளிகாலும் இருவாயி, ஆளி வகைகள், ஒலிபெருக்கி (Speaker) ஆகியன பற்றி ஏற்கனவே கற்றுள்ளீர்கள்.

ஒலியை எழுப்பக்கூடிய இலத்திரனியல் சுற்றுக்கள், விளையாட்டுப் பொருள்களின் கவர்ச்சித்தன்மையை அதிகரிப்பதற்காக பொருத்தப்பட்டுள்ளதுடன் பாதுகாப்புச் சமிக்ஞைகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறே ஒளி உமிழும் சுற்றுக்கள், நேரக்கட்டுப்பாட்டுச் சுற்றுக்கள் போன்ற அனேக சுற்றுக்களும் பயன்படுத்தப்படுகின்றன.


குறியீடு	துணைக் கூறின் பெயர்	புறத் தோற்றம்	தொழிற்பாடு	அலகு
	தடையி யிகள் (Resistors)		சுற்றில் பாயும் மின்னோட்டத்துக்கு தடையை ஏற்படுத்தி பாயும் மின்னோட் டத்தின் அளவை குறைத்தல் மற்றும் தடைக்குக் குறுக்கே அழுத்த வீழ்ச்சியை ஏற்படுத்தல்	Ω (ஓம்) உ+ம் :- 10 Ω 30 k Ω 47 m Ω
	கொள்ளளவி (Capacitors)		ஏற்றத்தை தற்காலிகமாக சேமித்து வைத்தல்	F (பரட்) உ+ம் :- 4.7 *M* 100 *M*
	ஒளி காலும் இருவாயி (LED)		காட்டியாகவும் ஒளிச்சுற்றுக்களிலும் பயன்படும்	
	ஆளிகள் (Switches)		சுற்றில் பாயும் மின்னோட்டத்தை நிறுத்துதல், பாயச் செய்தல், திசையை மாற்றுதல்	
	ஒலி பெருக்கி		மின்சமிக்ஞைகளை ஒலிச் சமிக்ஞை களாக மாற்றுதல்	Ω (ஓம்) உ+ம் :- 4 Ω 8 Ω
	மாறுந்தடையி	 	இந்த துணைக் கூறினை சுற்றில் இணைத்து அதன் தடைப் பெறுமா னத்தை மாற்றி சுற்று தொழிற்படும் விதத்தை மாற்றுதல்	Ω ஓம் உ+ம் :- 5 k 50 k

மேலே தரப்பட்ட துணைக் கூறுகளுக்கு மேலதிகமாகப் பயன்படுத்தப்படும் குறை கடத்தி உத்திகள் பற்றி இனி கற்றுக்கொள்வோம்.


• **இருவாயி** (Diode)

இலத்திரனியற் துறையில் பயன்படுத்தப்படும் இருவாயிகள் சீராக்கும் இருவாயி, ஒளிகாலும் இருவாயி என பல வகைப்பட்ட போதும் இங்கு சீராக்கும் இருவாயி பற்றி மட்டுமே ஆராயப்படும். இருவாயிகள் மின்னோட்டத்தை சுற்றினூடே ஒரு திசையில் மட்டும் பாயவிடும் தன்மையைக் கொண்டன. இந்த இயல்பின் அடிப்படையில் இருவாயி பல்வேறு தேவைகளுக்கெனப் பயன்படுத்தப்படும்.

இருவாயியைத் தெரிவுசெய்யும்போது அதற்குரிய சிறப்பியல்புகளின் அடிப்படையில் உற்பத்தியாளரினால் தரப்பட்ட இலக்கம் பயன்படுத்தப்பட வேண்டும். பொதுவாகப் பயன்படுத்தப்படும் சீராக்கும் இருவாயி 1N 4001 ஆகும்.




இருவாயிகள் இரண்டு முனைவுகளைக் கொண்டிருப்பதுடன் அவை அனோட்டு, கதோட்டு என அழைக்கப்படும். இருவாயியின் கதோட்டு முனையை இனங்காண ஏற்ற வகையில் நிற வளையம் இடப்பட்டுள்ளது. பின்வரும் சுற்று A யில் இருவாயியின் அனோட்டு முனையை மின்முதலின் நேர் முனைவுடனும், கதோட்டு முனையை மின்முதலில் மறை முனைவுடனும் இணைப்பதன் மூலமாக இருவாயியின் ஊடாக மின்னோட்டம் பாயும். இந்நிலையில் இந்த இருவாயி முன்முகக் கோடலுக்கு உட்பட்டுள்ளது எனப்படும்.



A சுற்று மின்குமிழ் ஒளிரும்
இருவாயி முன்முக கோடலுக்கு
உட்பட்டுள்ள சந்தர்ப்பம்

சுற்று B யில் காட்டியவாறு இருவாயியிகள் அனோட்டு முனைவுடன் மின்முதலின் மறை முனைவையும் கதோட்டு முனைவுடன் மின்முதலின் நேர் முனைவையும் இணைக்கும்போது இருவாயியினூடாக மின்னோட்டம் பாய்வதில்லை. இதன்போது இருவாயி பின்முகக் கோடலுக்கு உட்பட்டுள்ளது எனப்படும்.



B சுற்று மின்குமிழ் ஒளிராது
இருவாயி பின்முகக் கோடலுக்கு
உட்பட்டுள்ள சந்தர்ப்பம்

திரான்சிஸ்ரர் (Transistor)

இதுவரை நீங்கள் கற்ற இலத்திரனியல் உபகரணங்களில் இரண்டு முனைகள் மட்டுமே இருந்ததாக அறிந்தீர்கள். எனினும், திரான்சிஸ்ரரில் மூன்று முனைகள் காணப் படுகின்றன.


B முனைவு - அடி (Base)
C முனைவு - சேகரிப்பான் (Collector)
E முனைவு - காலி (Emitter)

இலத்திரனியல் சுற்றுக்களில் இரண்டு வகையான திரான்சிஸ்ரர்கள் பயன்படுத்தப்படும். அவையாவன,


- PNP திரான்சிஸ்சர்
- NPN திரான்சிஸ்சர்



திரான்சிஸ்ரர்களின் குறியீடுகள் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளன.









PNP திரான்சிஸ்ரர்



NPN திரான்சிஸ்ரர்


திரான்சிஸ்ரர் தயாரிப்போரால் அவற்றின் புறத்தே காணப்படும் முனைவுகளில் பல்வேறு விதமான குறியீடுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், அந்த முனைவுகளை இனங்காண்பதற்கு திரான்சிஸ்ரர் தரவுப் புத்தகம் பயன்படுத்தப்பட வேண்டும்.

சில திரான்சிஸ்ரர்களின் வடிவங்களும் அவற்றின் முனைகள் அமைந்துள்ள விதமும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. திரான்சிஸ்ரரின் பெயரை (இலக்கம்) எமது முகத்தை நோக்கி திருப்பி அவதானிக்கும்போது முனைவுகள் பெயரிடப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.


திரான்சிஸ்ரர்	முனை அமைந்துள்ள திரான்சிஸ்டர்	வெளித்தோற்றம்
BC108		
C828		
D400		

அஞ்சலி (Relay)

மின்னை வழங்கி ஆளியாகத் தொழிற்படச் செய்யவல்லதாகத் தயாரிக்கப்பட்ட அலகு அஞ்சலி எனப்படும். இங்கு மின்னை வழங்கவென இரண்டு முனைகளும் ஆளிக்குரி மூன்று முனைகளும் காணப்படும். பொதுவாக இங்கு பயன்படுத்தப்படுவது இருவழி ஆளியாகும். அஞ்சலியைத் தெரிவுசெய்யும்போது தொழிற்பாட்டு வோல்ற்றளவு (உதாரணம் 6V, 12V) ஆளி தக்குப்பிடிக்கக்கூடிய மின்னோட்டம் ஆகியன (உதாரணம் 10A, 20A) தொடர்பாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.




புறத்தோற்றம்



கீழ்ப்புறத்தோற்றம்


இல 1,2 ஆகிய முனைவுகளுக்கு அஞ்சலியைத் தொழிற்படச்செய்ய வேண்டிய மின்னோட்டம் வழங்கப்பட வேண்டும். இல 3 குரிய முனை ஆளியின் மத்திய இணைப்பாக அமைவதுடன் இல 4,5 ஆகியன மின்னோட்ட வழிகள் இரண்டிற்கும் இணைக்கப்படும் முனைகள் ஆகும்.



குறியீடு

ஒளியுணர் தடையிகள் (Light Dependent Resistors)

LDR எனப்படுவது புறத்தேயிருந்து கிடைக்கும் ஒளியின் அளவுக்கு ஏற்ப தடை மாறுபடும் துணைக் கூறாகும். இந்த துணைக்கூறுக்கு கிடைக்கும் ஒளி அதிகரிக்கும் போது தடை குறைவடைவதுடன், ஒளி குறைவடையும்போது (இருளில்) அதிக தடையைக் காட்டும். இதன் காரணமாக இந்தத் துணைக்கூறு ஒளியுள்ளபோது இருளில் தேவைக்கேற்றவாறு சுற்றினைத் தன்னியக்கமாகக் தொழிற்படச் செய்ய பயன்படுத்தப்படும்.



LDR C ß SÔ± k



¦Óz÷uõØÓ®

இலத்திரனியல் சுற்றுக்களை ஒருங்குசேர்க்கும்போது பயன்படுத்தப்படும் பொருள்கள், கருவிகள், உபகரணங்கள்

துணைக்கூறுகளை சுற்றுப்பலகையில் சரியாக உட்செலுத்த உறுதுணையாக முனைவுகளை இணைத்துக்கொள்ள தட்டைமுனைக் குறடு (Flat nose plier) பயன் படுத்தப்படும். மிகச் சிறிய துணைக்கூறுகளை பற்றிப் பிடிப்பதற்கு ருவீசர் (Tweezer) பயன்படுத்தப்படும்.



தட்டை முனைக் குறடு



ருவீசர்

பற்றாசு ஈயம்

இலத்திரனியல் சுற்றை ஒன்றிணைக்கும் பொழுது ஈயம், தகரம் ஆகிய உலோ கங்கள் கலந்து சேர்க்கப்பட்டு விசேடமாகத் தயாரிக்கப்பட்ட கம்பி பயன்படுத்தப்படும். ஒட்டும்பொழுது பன்படுத்தப்பட சுத்தமாக்குதல், ஈயத்தை நன்றாக உருக்கிச் சேரவைப்பதன்மூலம் இணைத்தல், மென்மையடைதல், பாதுகாப்புப் பெறுவதற்கான பொருள்கள் இக்கம்பிகள் எடுக்கப்பட்டதன் காரணமாக நட்டுதலை இலகுபடுத்ததும். இலத்திரனியல் சுற்றுக்களை ஒருங்கு சேர்க்கும்போது பற்றாசுபிடிக்கும் ஈயம் பயன் படுத்தப்படும்.

மின் பற்றாசுக் கோல் (Electric Soldering Iron)

இலத்திரனியல் துணைச்சாதனங்களை சுற்றுப்பலகையில் வைத்து பற்றாசு பிடிப்பதற்கு மின்னால் இயங்கும் பற்றாசுக்கோல் பயன்படுத்தப்படும். இது மின்சாரம் மூலம் இயங்குவதால் பாதுகாப்பாகக் கையாளப்பட வேண்டும். இதன் முனை சூடான நிலையில் 180 ^{0}C - 185 ^{0}C க்கு இடைப்பட்ட வெப்பநிலையில் காணப்படுவதால் மிகத் கவனமாகக் கையாள வேண்டும். சூடான பற்றாசுக்கோலை வைப்பதற்கு கம்பியாலான தாங்கி பயன்படுத்தப்பட வேண்டும்.

துணைக்கூறுகளை சுற்றுப்பலகையில் பொருத்தும்போது, துணைக்கூறுகளின் முனைவுகள் சுத்தமானதாக காணப்பட வேண்டும். சுற்றுப்பலகையில் துணைக் கூறுகளைப் பற்றாசுப் பிடித்த பின்னர் மேலதிகமாக உள்ள முனைவுகளை வெட்டி அகற்ற வெட்டுக்குறடு (Cutting plier) பயன்படுத்தப்படும்.



மின்பற்றாசுக் கோல்



வெட்டுக் குறடு

சுற்றுக்களை ஒருங்குசேர்க்கப் பயன்படும் பலகை வகைகள்

சுற்றுக்களை ஒருங்குசேர்க்க பல்வேறு சுற்றுப் பலகைகள் பயன்படுத்தப்படும். எனினும், பிரதானமாக இரண்டு வகையான சுற்றுப்பலகைகள் இதற்கென அதிகளவில் பயன்படுத்தப்படும். அவையாவன,


(i) செயற்றிட்டப் பலகை (Project Board)
(ii) புள்ளித்தாயப் பலகை (Dot Matrix Board)

செயற்றிட்டப் பலகை

இது சுற்றுக்களை வாய்ப்புப் பார்க்கவும் ஆய்வுகூட நடவடிக்கைகளில் சுற்றுக்களின் செயற்பாட்டை உறுதிப்படுத்தவும் பயன்படும்.

இதில் நிரல்களிலும் நிரைகளிலும் துளைகள் காணப்படும். சுற்றுக்களை அமைக்கும் போது துணைச் சாதனங்களின் முனைகள் இத்துளைகளினுள் புகுத்தப்படுவதன் மூலம் செயற்றிட்டப் பலகை இணைக்கப்படும். உருவில் காட்டப்பட்டவாறு செயற்றிட்டப் பலகையில் மேலும் கீழுமாக இரண்டு வரிசைகளில் துளைகள் காணப்படும். தனித்தனியே காணப்படும் ஒவ்வொரு ஐந்து துளைகளும் ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டிருக்கும்.


நடுப்பகுதியில் நிரல்களில் காணப்படுகின்ற ஒவ்வொரு ஐந்து துளைகளும் ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டிருக்கும். இதன்மூலம் ஒரு துளையில் பொருத்தப்படும் சாதனத்தின் ஒரு முனை ஏனைய நான்கு துளைகளுடனும் தொடுப்பில் இருக்கும்.



செயற்றிட்டப்பலகை

புள்ளித்தாயப் பலகை

இலத்திரனியல் சுற்றுக்களை ஒருங்குசேர்ப்பதற்கென பயிலுநர்களுக்கு மிகப் பொருத்தமான பலகை வகையாகும். இதன் ஒரு பக்கம் நாரிழைத் தகட்டினாலும் மறுபக்கம் புள்ளிகளைக் கொண்ட செப்புத் துண்டுகளாலும் ஆக்கப்பட்டுள்ளது. இணைக்க வேண்டிய துணைக்கூறுகளை நாரிழைப் பகுதியினூடாகச் செலுத்தி புள்ளிகள் கொண்ட செப்பு உபகரணப் பிரதேசத்தில் பற்றாசுப் பிடித்தல் வேண்டும். மேலும், சுற்றிலுள்ள துணைக்கூறுகளிடையே தொடர்பை ஏற்படுத்துவதற்காக கடத்திகள் (Jumpers) பயன்படுத்தப்படும்.



புள்ளித் தாயப்பலகை


அன்றாடம் வீட்டில் சேரும் இலத்திரனியல் கழிவுப் பொருள்களை இனங் காண்போம் - அவற்றை சரியான முறையில் அகற்றுவோம்

தொழினுட்ப மேம்பாட்டுடன் நாம் பயன்படுத்தும் இலத்திரனியல் கருவிகளின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்து வருகிறது. இந்தக் கருவிகளை தொழிற்படச் செய்ய பயன்படுத்தப்படும் அனேக மின்கலங்களில் பார உலோகங்கள் அடங்கியுள்ளன. பயன்பாட்டின் பின்னர் கழித்தொதுக்கப்படும் அவ்வாறான கழிவுகளை நேரடியாக சூழலில் சேர்ப்பதனால் அவற்றில் அடங்கியுள்ள இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் பார உலோகங்கள் மண், நீர் ஆகியவற்றில் சேர்வதனால் சிறுநீரகம் சார்ந்த நோய்களுக்கு ஆளாவோர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது. மேலும் பயன்பாட்டின் பின்னர் கழித்தொதுக்கப்படும் CFL மின்குமிழ்களில் அடங்கியுள்ள பதார்த்தங்கள் மற்றும் இலத்திரனியல் பாகங்கள் மேற்கூறப்பட்ட நிலைமை ஏற்பட காரணமாக அமைகின்றன.

இவ்வாறான உதிரிப்பாகங்களை முறையற்ற வகையில் வெளியேற்றுவதன் மூலம் சூழலுக்கு ஏற்படத்தக்க பாதிப்புக்களை குறைக்கும் முகமாக பல்வேறு நிறுவனங்கள் அக்கழிவுகளைச் சேகரித்து வருகின்றன. எமது வீடுகளிலும் அயல் வீடுகளிலும் காணப்படும் இவ்வாறான கழிவுப்பொருள்களை அந்நிறுவனங்களுக்கு வழங்குவதன் மூலம் சூழலுக்கு ஏற்படத்தக்க பிரச்சினைகளைக் குறைக்க முடியும்.

ö\¯Ø£õk 3.4

கீழே தரப்பட்டிருக்கும் சுற்றுக் குறிப்புக்கமைய துணைப்பாகங்களை ஒன்றிணைத்து அதன் செயற்பாட்டை அவதானிக்கவும்.



- R_1, R_2 - 18 KΩ
- C_1, C_2 - 100 MF
- Tr_1, Tr_2 - C 828

- R_1, R_2 ஆகிய தடைகளினதும் C_1, C_2 ஆகிய கொள்ளளவிகளின் பெறுமானத்தில் வேறுபாட்டை ஏற்படுத்தி செயற்பாட்டுத் தன்மையை அவதானிக்கவும்.

- பல்வேறு செயற்பாடுகளுடன் கூடிய எளிமையான இலத்திரனியல் சுற்றொன்றைக் கண்டுபிடிக்கவும். அவற்றுள் நீங்கள் தெரிவு செய்த சந்தர்ப்பமொன்றிற்கு அல்லது ஆக்கமொன்றிற்குப் பிரதியீடு செய்வதற்குப் பொருத்தமான சுற்றொன்றைத் தெரிவு செய்யவும். அந்தச் சுற்றை இங்கு சேர்த்து உங்களது ஆக்கத்தை மேம்படுத்தவும்.

3.3 வெளியின் உச்சப் பயனைப் பெறுவோம்

இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களுக்கு

- வெளி முகாமைத்துவத்தின்போது ஏற்படும் சிக்கல்களை விவரிக்கவும்
- மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியை முகாமை செய்யத்தக்க விதமான தீர்வுப் பிரேரணைகளை சமர்ப்பிக்கவும்
- தீர்வுக்கான நிருமாணிப்புக்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தவும்
- கணினி மென்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு வெளியை முகாமை செய்வதற்கான திட்டங்களைத் தயாரிக்கவும்

இயலுமாகும்.

நாம் வாழும் சூழலில் இடவசதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், சனத்தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இவ்வாறான மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியில் வாழும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்க, தேவைகளும் அளவுக்கதிகமாக அதிகரிக்கும். குறிப்பிட்ட இடத்திலுள்ள நபர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற போதும் அதற்குச் சார்பாக இடவசதி அதிகரிக்காது. இவ்வாறான மட்டுப்படுத் தப்பட்ட இடவசதியில் நிலவும் வெளியை முகாமை செய்வது தற்காலத்தின் தேவையாக அமைகின்றது.

தனியான வீட்டுக்குப் பதிலாக வெளியை உச்ச அளவில் பயன்படுத்த ஏற்ற தொழினுட்ப அணுகுமுறையாக தொடர்மாடிக் குடியிருப்புக்களை நிருமாணித்தல் உலகமெங்கும் தற்போது காணக்கூடியதாக உள்ளது. உங்கள் வீடு, பாடசாலை ஆகியன அமைந்துள்ள வளவில் பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் இடவசதியை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு பல்வேறு உத்திகள் பயன்படுத்தப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியை அதிக பயன்தரு தன்மை கொண்டதாகப் பயன் படுத்தத்தக்க சிக்கனமான உத்திகள் சில வருமாறு,

- மடித்து வைக்கும் உத்தி
- அடுக்கி வைக்கும் உத்தி
- பாகங்களாகக் கழற்றி வைக்கும் உத்தி
- பயன்படுத்தப்படாதுள்ள இடவசதியைப் பயன்படுத்தும் உத்தி
- பல்நோக்கு தொழிற்பாடுகளை செய்யும் உத்தி

ö\ ¯Ø£õk 3.5

மேற்படி உத்திகள் வீட்டிலுள்ள விறாந்தை, படுக்கையறை, சாப்பாட்டறை, சமையலறை, கழிப்பகம், வாகனத் தரிப்பிடம், மாடிப் படிக்கட்டுகளின் கீழ்ப் பகுதி ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள விதத்தை ஆராயுங்கள்.

மேலே கூறப்பட்ட பல்நோக்கு முறைகளை நிருமாணிக்கும்போது பயன்படுத்தப்படும் உத்திகளைப் பற்றி அறிந்து கொள்வோம்.

- **மடித்துவைக்கும் உத்தி**

அளவில் சிறிய பாகங்களை மடித்து வைத்து தேவையேற்படும்போது மட்டும் பிரித்து பின்னர் மடித்து வைக்கக் கூடியதாகத் தயார்செய்யப்பட்ட பொருள்களை நீங்கள் கண்டிருக்கக் கூடும். வீடுகளில் பயன்படுத்தப்படும் வானொலியின் வான்கம்பி, குடை போன்றன நீங்கள் அவதானித்திருக்கக் கூடிய உபகரணங்கள் ஆகும். பின்வரும் படங் களை அவதானித்து அவை தயாரிக்கப்பட்டுள்ள விதத்தை அறிந்து கொள்க.









மடித்து வைக்கும் உத்திகளைக் கொண்ட தளபாடங்கள் சில

மடித்துவைக்கக் கூடிய உத்திகளில் பிணையல், ஊஞ்சல் ஆணி போன்ற நுட்பமுறைகள் பயன்படுத்தப்படும்.

- **அடுக்கி வைக்கும் உத்தி**

இலகுவாக அடுக்கி வைக்கத்தக்க வகையில் பொருள்களைத் தயாரித்தலே இவ்வாறு அழைக்கப்படும்.
உ+ம் :- கடதாசிப்பெட்டி, பிளாத்திக்கு வாளி, பிளாத்திக்குக் கதிரை



அடுக்கி வைக்கக் கூடியதாகத் தயாரிக்கப்பட்ட பொருள்கள்

ஆக்கம் அல்லது பொருளொன்றை அடுக்கி வைக்க ஏற்ற வகையில் பல்வேறு உத்திகள் பிரயோகிக்கப்பட்ட முடிவுப் பொருள்கள் இதிலடங்கும். சில சந்தர்ப்பங்களில் முடிவுப்பொருள் பாகங்களைத் தயாரிக்கப்பட்டு அவற்றை ஒருங்கு சேர்த்து கருமத்தை மேற்கொள்ள முடிவதுடன் தேவையேற்படும்போது சிறிய இடப் பரப்பில் களஞ்சியப்படுத்தி வைக்கக் கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன. பிளாத்திக்குக் கதிரைகள், மேசை ஆகியன இதற்கு உதாரணங்களாகும். இங்கு அடிப்பகுதி அகலமாகத் தயாரிக்கப்படுவதனால் சமநிலையை அதிகரிப்பதே இதன் அடிப்படை ஆகும். அவ்வாறே அடிப்பகுதியின் பரப்பளவு குறைவாக அமையுமாறு தயாரிக்கப்பட்ட பூச்சாடி, பேசின்கள், தட்டு வகைகள் ஆகியன ஒன்றினுள் ஒன்று அடுக்கி வைக்கத்தக்கதான முறைக்கான உதாரணங்களாகும்.

மேல், கீழ் மேற்பரப்புக்களின் அளவை தேவைக்கேற்ப மாற்றியமைத்து அவற்றை ஒன்றன்மீதொன்று இட்டு குறைந்த இடப்பரப்பில் களஞ்சியப்படுத்தலாம்.

நவீன கட்டுமானங்களில் பயன்படுத்தப்படும் மேடை, தற்காலிகக் கொட்டகைகள் ஆகியன தேவைப்படும்போது அவற்றைப் பொருத்திப் பயன்படுத்தக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. தேவையின் முடிவில் அவை வேறாக்கப்பட்டு குறைந்த இடப்பரப்பில் அடுக்கி வைக்கக் கூடியதாக உள்ளன.

ö\¯Ø£õk 3.6

மேற்படி உருக்களில் வெளியை சிறப்பான முறையில் பயன்படுத்தத்தக்கதாக அடுக்கி வைக்கக்கூடிய உத்திகள் சில காட்டப்பட்டுள்ளதுடன் உங்களது பாடசாலையில் உள்ள இவ்வாறான உபகரணங்களில் அவற்றை நிலையாக நிறுத்திவைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள முறைகள் மற்றும் ஒன்றன்மீதொன்றாக அடுக்கிவைக்கக் கூடிய விதம் ஆகியவற்றை அறிந்து கொள்ளுங்கள்.

- **பாகங்களைக் கழற்றி வைக்கத்தக்க உத்தி**

மட்டுப்படுத்தப்பட்ட இடப்பரப்பைக் கொண்ட வெளியிலிருந்து உச்சப் பயனைப் பெறுவதற்கென குறைவான நீளம், அகலம் ஆகியன கொண்ட இடத்தில் அதிக எண்ணிக்கையான பொருள்களை அடுக்கி வைப்பதற்கு, பாகங்களாக கழற்றி வைக்கத்தக்க இலாச்சிகளைக் கொண்ட அல்லது இலாச்சிகள் அற்ற அலுமாரி அல்லது இறாக்கைகள் போன்றன பயன்படுத்தப்படுகின்றன. மாடி வீடுகளின் படிக்கட்டுகளின் கீழே உள்ள இடத்தில் பாகங்களாகக் கழற்றப்பட்ட பொருள்களை அடுக்கி வைக்க முடியும்.



பாகங்களாகக் கழற்றி வைக்கக்கூடிய பொருள்கள்

- **பயன்படுத்தப்படாத இடவசதியைப் பயன்படுத்தும் உத்தி**

மட்டுப்படுத்தப்பட்ட இடவசதி கொண்ட வீட்டில் / அலுவலகத்தில் உங்கள் கதவு, சுவரிற்கு சமாந்தரமாக தள்ளித் திறக்கக் கூடியதாக அமைப்பதன் மூலமாக கதவை திறப்பதற்கு மேலதிக இடவசதி தேவைப்படாமை அனுகூலமாக அமைகிறது. இவ்வாறான படலைகள், முகப்பு வாயிலில் பொருத்தப்பட்டிருப்பதை அவதானித்திருப்பீர்கள். அவ்வாறே வியாபார நிலையங்களில் சுருக்கி வைக்கத்தக்க கதவுகள் பயன்படுத்தப்படும். இவற்றுக்குப் போதிகைகள் அல்லது கப்பிகள் பொருத்தப்பட்டு இலகுவாக இயக்க முடியும். இவ்வாறான உபகரணங்களின் நீண்டகாலப் பாவனைக்கெனப் பொருத்தமான உராய்வு நீக்கல் முறை தேவைப்படும்.

நம்முன்னோர் தங்களிடமிருந்த மேலதிக பாய்களை வைத்திருப்பதற்கான உத்தியாக தாழ்வாரத்தின் கீழ்ப்பகுதியில் கட்டப்பட்டிருந்த கயிற்றில் வைக்கக்கூடிய உத்தியைப் பயன்படுத்தினர். மேலதிக இடவசதியைப் பயன்படுத்தாது கிடைக்கத்தக்க இடப்பரப்பினுள் தொழிற்படத்தக்க முடிவுப் பொருள்கள் சில வருமாறு,



சில்லுப் பொருத்தப்பட்ட படலை

- **பலநோக்கு உத்திகள் கொண்ட பொருள்கள்**

தொழினுட்பத்துறை முன்னேற்றத்துடன் ஒரு பொருளிலிருந்து பல்வேறு தேவைகளை மேற்கொள்ளத்தக்கவாறான ஆற்றலைக் கொண்ட பலநோக்கு உபகரணங்களை தயாரிப்பதன் மூலம் குறைந்த இடப்பரப்பைப் பயன்படுத்தல், பயன்படுத்த இலகுவாக அமைதல், களஞ்சியப்படுத்த குறைவான இடவசதி தேவைப்படல் போன்ற அனுகூலங்கள் கிடைக்கும். இவற்றின் காரணமாக இவ்வாறான உற்பத் திகளுக்கு அதிக கேள்வி நிலவும்.

உதாரணமாக, நவீன செல்லிடத் தொலைபேசிகளில் பிறருடன் தொடர்பு கொள்வதற்கு மேலதிகமாக ஒளிப்படம் எடுத்தல், தரவுகளைச் சேமித்தல், பிற உபகரணங்களிலிருந்து தரவுகளைப் பெறுதல் போன்ற மேலதிக வசதிகள் உள்ளன. கீழே காட்டப்பட்டுள்ளவை பல்வேறு நோக்கங்களுக்கெனப் பயன்படுத்தத்தக்கதாக நிருமாணிக்கப்பட்ட ஆக்கங்கள் சிலவாகும்.



இருக்கையாக கட்டிலாக



பலநோக்கு உபகரணத் தொகுதி



உளித்தொகுதி

சில உபகரணங்களை, பலநோக்கு உபகரணங்களாக மாற்றுவதற்கு ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள சில பாகங்களைக் கழற்றி வேறு பாகங்களைப் பொருத்த வேண்டி ஏற்படும். பல்வேறு தொழிற்பாடுகளைச் செய்யக்கூடிய உபகரணங்கள் பலவற்றை இவை உள்ளடக்கியதாக இருக்கலாம். இவ்வாறான நிலைமையில் தேவையான பாகங்களை மட்டுமே வெளியே எடுத்து வேலைசெய்த பின் அவற்றை இலகுவாக மடித்து வைக்க முடியும்.

வெளியை உச்ச அளவு பயன்தரு தன்மை கொண்டதாகப் பயன்படுத்தக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ள பொருள்கள் பற்றி நீங்கள் கற்றுள்ளீர்கள்.

ö\¯Ø£õk 3.7

உங்கள் வீட்டில் / பாடசாலையில் உள்ள வெளியை முகாமை செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பொருள்களை இனங்கண்டு அவற்றினால் எதிர்பார்க் கப்படும் கருமங்களை நிறைவேற்ற பயன்படுத்தப்பட்டுள்ள உத்திகள், இவ்வாறான பொருட்களின் முக்கியத்துவம் ஆகியன அடங்கிய சிறு நூலொன்றைத் தயாரிக்க.

உங்களது பாடசாலை அல்லது வீட்டில் குறைவான இடவசதிக்கென அதிக பயன்தரு தன்மை கொண்டதான தீர்வுகளை நடைமுறைப்படுத்துவது உங்களது பொறுப் பாகும். இந்தத் தீர்வுகள், செயற்றிட்ட எண்ணக்கருவின் அடிப்படையிலேயே பூரணப் படுத்தப்பட வேண்டும். உங்களது வயதுக்கு ஏற்றவாறான சூழலுக்கு உவப்பான வகையிலான, கலாசார மரபுகளுக்கு பொருத்தமான விவரக்கூறுகளுக்கு அமைவாக செயற்றிட்ட எண்ணக்கருவை நடைமுறைப்படுத்தத் தேவையான படிமுறைகளைக் கொண்டதாக அமைந்திருக்க வேண்டும்.

செயற்றிட்ட எண்ணக்கருவுக்கு அமையச் செயற்படல்

பயன்தருதன்மை கொண்டதும் கலைத்துவம் மிக்கதுமான தரமான நிருமாணிப்புகள் உருவாக பிரச்சினைகளை சரியாக விளங்கிக் கொள்ளல், பிரச்சினைகளுக்கு அடிப்படையாயமைந்த நிலைமையைப் பகுப்பாய்வு செய்தல், விவரக்கூறு தயாரித்தல், தீர்வுகளைப் பிரேரித்தல், திட்டத்திற்கேற்பச் செயற்படல், சரியான தீர்மானங்களை மேற்கொள்ளல், கருமங்களை மேற்கொள்ளல், சரியாக கருவிகள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்தல், நுட்பமுறைகளைப் பயன்படுத்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தச் செயன்முறையில் நீங்கள் பெற்ற அனுபவம், கற்ற விடயங்கள் ஆகியவற்றி னூடாக பிரச்சினையொன்றுக்குரிய தீர்வுகளைப் பெற்ற விதம் பற்றி நியம முறையில் குறித்துக் கொள்ளுதல் அவசியமாகும். இதனை ஆசிரியரது வழிகாட்டலுடன் மேற்கொள்வது அவசியமாகும். செயற்றிட்ட எண்ணக்கருவை அமுல்செய்யும்போது கைக்கொள்ள வேண்டிய படிமுறைகள் பற்றி ஆராய்வோம்.

● பிரச்சினையை இனங்காணல்

நீங்கள் உங்களால் தீர்வு காணக்கூடிய பிரச்சினையொன்றையே தெரிவு செய்து கொள்ள வேண்டும். குறிப்பிட்ட பிரச்சினைக்கு அடிப்படையாக அமையாத விடயங்கள் பற்றி ஓரளவு ஆராய்வதன் மூலம் மிகப் பொருத்தமான தீர்வினை சமர்ப்பிக்கக் கூடியதாக அமையும்.

உங்கள் வீட்டில் அல்லது பாடசாலையில் அல்லது வகுப்பில் உள்ள இடவசதி பற்றிய பிரச்சினையொன்றை இனங்காண்போம். அதற்கான உதாரணங்கள் சில வருமாறு,

- வகுப்பறையிலுள்ள உயரமான பகுதிகளில் காணப்படும் சிலந்தி வலைகளை அகற்ற சிரமமாதல்
- வகுப்பறையில் செயன்முறைத் தொழினுட்பத் திறன்கள் பாடத்தில் மேற்கொள்ளப் பட்ட ஆக்கங்களை களஞ்சியப்படுத்த இடவசதி போதாமை
- பிள்ளைகளின் புத்தகப் பைகளை கதிரையின்மீது வைப்பதனால் அதன்மீது அமர்ந்துகொள்ள சிரமமாதல்
- சிறிய அறையொன்றில் இருக்கும் இரண்டு சகோதரர்கள் புத்தகங்களை வைத்துக் கொள்ள சிரமப்படல்

மேலே குறிப்பிட்டவை வீடு, பாடசாலை ஆகியவற்றில் இனங்காணக் கூடிய உம்மால் தீர்வு காணக்கூடிய பிரச்சினைகள் சிலவாகும். இவ்வாறான நிலைமைகளை நீங்கள் வசிக்கும் சூழலிலும் உங்களால் இனங்காண முடியும்.

இவ்வாறு பிரச்சினைகளை இனங்கண்ட பின்னர் தீர்வுகளைக் கண்டறிய முன்னதாக அந்தப் பிரச்சினைக்கு அடிப்டையாக அமைந்த விடயங்கள் பற்றி ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும்.

உதாரணமாக, வீட்டிலுள்ள அறையொன்றில் இரண்டு சகோதரர்கள் தமது புத்தகங்களை வைப்பதற்கு சிரமப்படல் எனும் பிரச்சினையை நோக்குவோம். அந்தப் பிரச்சினை தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் சில வருமாறு,

- இரண்டு சகோதரர்களினாலும் வைக்கப்படும் புத்தகங்களின் எண்ணிக்கை
- புத்தகங்களின் நீள, அகலங்கள்
- வெவ்வேறு அளவுகள் கொண்ட புத்தகங்களின் எண்ணிக்கை
- இரண்டு சகோதரர்களினதும் புத்தகங்களை வெவ்வேறாக வைத்தல்
- வைக்கப்பட்ட புத்தகங்களை தேவையான சந்தர்ப்பங்களில் இலகுவாக எடுக்கக் கூடிய வசதி
- சுமையைத் தாங்கக் கூடிய வசதி
- நீடித்த பாவனை

மேலே குறிப்பிட்டவாறு பிரச்சினையொன்றை ஆராய்ந்த பின்னர் தீர்வில் காணப்பட வேண்டிய பண்புகள் பற்றிய விளக்கம் கிடைக்கும். இதனடிப்படையில் தீர்வின் விவரக்கூறு பற்றித் தீர்மானிக்க வேண்டும்.

செயற்றிட்டக் கருமங்களின்போது ஒவ்வொரு படிமுறையிலும் திட்டமிடல், தீர்மானித்தல், நடைமுறைப்படுத்தல், பின்னரான மதிப்பீடு ஆகியவற்றை சரியாக மேற்கொள்வதன் மூலம் வெற்றிகரமாக செயற்றிட்டத்தைப் பூர்த்தி செய்யலாம்.

தொழிற்பாட்டுத் திட்டத்தினை உரிய காலத்தில் பூரணப்படுத்துவது முக்கியமாகும். இது சிறந்த வேலைப் பழக்கமாகும். இவ்வாறான திட்டத்தின் மூலம் செயற்பாடு களை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்பாகப் பூரணப்படுத்த தேவையான உள உறுதி கிடைக்கும். இவ்வாறான திட்டமொன்றில் அடங்க வேண்டிய செயற்பாடுகள் சில வருமாறு,

1. குழுநிலையில் கலந்துரையாடலும் வேலைகளை ஒப்படைத்தலும்
2. தேவை, பிரச்சினை ஆகியவற்றை இனங்காணல்
3. பயன்பாட்டிலுள்ள இடவசதியை சிக்கனப்படுத்தக் கூடிய ஆக்கத்தையும் தொழி னுட்பத்தையும் அறிந்து கொள்ளல்
4. பிரச்சினையின் தன்மை மற்றும் அதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அறிந்து கொள்ளல்
5. தீர்வுகளைப் பிரேரித்தலும் உத்தேச தீர்வின் திட்ட வரைபைத் தயாரித்தலும்
6. பொருள்களைப் பெற்றுக்கொள்ளலும் நிருமாணிப்புச் செயன்முறையைத் திட்டமி டலும்
7. திட்டத்துக்கமைய பொருள்களை உரியவாறு பயன்படுத்தி மாதிரியுருவை / முடிவுப்பொருளைத் தயாரித்தல்
8. முடிவுப்பொருளின் வெற்றியைச் சோதித்தல்
9. இனங்காணப்பட்ட குறைபாடுகள் இருப்பின் அவற்றை நிவர்த்திச் செய்து செயற் றிட்டத்தைப் பூர்த்தி செய்தல்.

உங்களது ஆக்கத்தின் இறுதியில் சமர்ப்பிக்கப்படும் செயற்றிட்ட அறிக்கையில் கால வரையறை, பிரச்சினையை இனங்காணும்போது பின்பற்றப்பட்ட படிமுறைகள், இதற்கென ஆலோசனைகள் பெறப்பட்ட விதம், ஏற்பட்ட சிக்கல்கள், அவற்றை தீர்த்துக்கொண்ட விதம், தேவையான பொருள்களை தெரிவுசெய்ய அடிப்படையாக அமைந்தவை, பயன்படுத்திய கருவிகள், மற்றும் உபகரணங்கள், பயன்படுத்தப்பட்ட தருணத்துக்கேற்ற உபகரணங்கள், நுட்பமுறைகள் ஆகியன உள்ளடக்கப்பட வேண்டும்.

- **தீர்மானித்தலும் செயற்படுத்தலும்**

இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பிரேரிக்கும்போது புத்தகங் களின் அளவு (நீளம், அகலம், உயரம், வடிவம்) நிருமாணிப்பில் அடங்கியிருக்க வேண்டிய மானுட அளவையியல் சார்ந்த இயல்புகள் (மனித தேவைக்கான பொருத்தப்பாடு) ஆகிய காரணிகள் முக்கியமாகும். அவ்வாறே சூழலுக்கு உவப்பான பதார்த்தங்களின் பயன்பாடு, நீடித்தப் பயன்பாடு போன்ற இயல்புகள் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும். உதாரணமாக கதிரையில் அமர்ந்தவாறு மேசையின் மீதுள்ள புத்தகங்களை எடுக்கக்கூடிய ஆற்றல் போன்ற விடயங்கள் தொடர்பாக சிறப்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இதற்கமைய தீர்வின் தன்மையின் பருமட்டான திட்டத்தை முப்பரிமாண வரை படமாகக் காட்டுவது முக்கியமாக அமையும். அவற்றின் அளவுகளும் குறிக்கப்பட வேண்டும். அல்லது திட்டமிடும்போது தொழினுட்ப வரைதல் அல்லது பருமட்டான வரிப்படம் (அளவுகளுடன் கூடியதான) பொருளைத் தயாரிக்கத் தேவையான மூலப்பொருள்களின் அளவைத் தீர்மானிக்க முடியும். அவ்வாறான ஆக்கத்தின் தன்மையை பிறருக்கு விளங்கப்படுத்த முடியும். அவ்வாறே, முடிவுப்பொருளில் ஏதேனும் குறைபாடுகள் காணப்படுமாயின் அவற்றை நிருமாணிக்க முன்பதாக இனங்கண்டு சீர்செய்ய இயலும்.)

உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுக்கான நிருமாணிப்பை அளவில் சிறிய மாதிரியாக அமைத்தல் போதுமானதாகும். தயாரிக்கப்பட்ட மாதிரியுருவை விவரக்கூற்றுடன் ஒப்பிட்டு உரிய நிருமாணிப்பை மேற்கொள்ள வேண்டும். அதன் பின்னர் அதிலுள்ள குறைபாடுகளை இனங்கண்டு அவற்றைச் சீர்செய்து உரிய ஆக்கத்தை தயாரிக்க வேண்டும்.
அத்துடன் அந்த நிருமாணிப்பை மேற்கொள்வதற்காகப் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தல் வேண்டும்.

- எதிர்பார்த்த தரப்பண்புகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதன்மை, கையாளுதல், வடிவமைப்புச் செய்தல் ஆகியவற்றின் இலகுதன்மை செலவுச் சிக்கனம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரதியீட்டுப் பொருள்களைத் தெரிவு செய்தல்
- வடிவமைப்பை மேற்கொள்வதற்குத் தேவையான கருவிகள், உபகரணங்களை தெரிவு செய்தல்
- சரியான அளவுகளை குறித்துக் கொள்ளல், பாகங்களை அமைக்குதல், வடிவமைப்புச் செய்தல்
- முடிப்புச் செய்வதற்கு தேவையான வழிமுறைகளையும் பொருள்களையும் தெரிவு செய்தலும் பயன்படுத்தலும்
- இணைக்கும் முறைகளும் அதற்கான பொருள்களும்

நீங்கள் சமர்ப்பித்த பிரச்சினைகளுக்கான தீர்வாக மேசையின்மீது வைக்கக் கூடிய சிற்றறைகள் கொண்ட இறாக்கையொன்றை நிருமாணிப்பது எனக் கொள்வோமாயின் அந்த நிருமாணிப்பின் நீளம், அகலம், உயரம் புத்தகங்களின் அளவுக்கமைய மேசை மீது வைக்கும்போது அது உறுதியாகக் காணப்பட வேண்டும். அவ்வாறே மேசையின் மீது வைத்த பின்னர் அந்த மேசையில் படிப்பதற்கான இடவசதி காணப்பட வேண்டும். புத்தகங்களின் எண்ணிக்கை அதிகமாயின் மேசையின் இலாச்சிகளைப் பயன்படுத்துவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.



தயாரிக்கப்பட்ட ஆக்கத்திறன் கொண்ட
புத்தக இறாக்கை

இதற்காகப் பயன்படுத்தக்கூடிய நிருமாணிப்பின் மாதிரியுரு மேலே காட்டப் பட்டுள்ளது. உங்களின் படைப்பாற்றல் அடிப்படையில் இதிலும் மிக கவர்ச்சியான நிருமாணிப்பைத் தெரிவு செய்து தயாரிப்பதற்கு பங்களிப்பைச் செலுத்துதல் அவசியமாகும். இங்கு உங்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்குத் தீர்வு காண்பதறற்காக பயன்படுத்தப்பட்ட வழிமுறைகள் வகுப்பறையில் மட்டுமன்றி வாழ்நாளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாக தீர்வு காண்பதற்கு உறுதுணையாகும்.



தயாரிக்கப்பட்ட ஆக்கத்திறன் கொண்ட
புத்தக இறாக்கைகள்

கணினி மென்பொருளைப் பயன்படுத்தி வெளி முகாமைத்துவத்துக்கான திட்டத்தைத் தயாரித்தல்


எமது சூழலில் பயன்படுத்தத்தக்க இடவசதி மட்டுப்படுத்தப்பட்டு இருப்பதனால் கிடைக்கத்தக்க இடவசதியை உச்ச அளவில் பயன்படுத்தக் கூடியவாறு திட்டமிட்டு பயன்படுத்துவதை சிறு வயதிலிருந்தே பழகிக்கொள்வது அவசியமாகும். இவற்றில் வீட்டினுள் தளபாடங்களை இடப்படுதல் முக்கியமானதாக அமையும். அவ்வாறே பொருள்களை கொண்டு செல்லும்போது உச்ச வினைத்திறனுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். சிலவற்றை பயன்படுத்த ஏற்றவாறு அடுக்கி வைக்க வேண்டும். இவ்வாறான விடயத்தை முன்னரே திட்டமிடுவதன் மூலம் காலம், பணம் ஆகியன மீதமாகும். கணினி முறையில் திட்டமிட ஏற்றவாறான மென் பொருள்கள் பல உள்ளன. இங்கு Envisioneer Express 5.0 எனும் மென்பொருளை பயன்படுத்தும் விதத்தைப் பற்றி ஆராய்வோம்.

Envisioneer Express 5.0 எனும் இந்த மென்பொருளை இணையத்திலிருந்து தரவிறக்கம் செய்ய (download) http://envisioneer- express 5.0 softonic.com எனும் முகவரியில் பயன்படுத்தலாம். அதில் குறிப்பிட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய அந்த மென்பொருளை கணினியில் நிறுவிக் கொள்ளலாம்.

மென்பொருளை திறப்பதற்கு பின்வரும் படிமுறைகளைக் கைக்கொள்க.

Start ⟶ All Programmes ⟶ cadsoft ⟶ Envisioneer Express 5.0 ⟶ Enter

இல்லையேல் கணினித்திரையில் உள்ள  குறும்வழிப் படவுருவின் மீது இரு தடவைகள் கிளிக் செய்வதன் மூலம் Envisioneer Express 5.0 இடை முகப்பைத் திறந்து கொள்ள முடியும். இந்த முகப்பு பின்வருமாறு காட்சியளிக்கும்.




Envisioneer Express இடைமுகம்


Menu Bar

இது மென்பொருளை இயக்குவதற்கான அடிப்படைக் கோப்பாக அமைவதுடன் அதன் மீதுள்ள கோப்புகளைக் கிளிக்செய்வதன் மூலம் தேவையான உபகோப்புகளைப் பெறமுடியும். வரிபடங்களை வரையும்போது அறைகளைத் தயார்செய்தல் மிக முக்கிய செயற்பாடாகும். பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைய கணினியை இயக்குவதன் மூலம் சொல்லாடல் பெட்டியை பெற்றுக்கொள்ளலாம்.


Setting ⟶ Program settings ⟶ Enter மூலமாகவோ Program setting மூலமாகவோ சொல்லாடல் பெட்டி கிடைக்கப் பெறுவதுடன் அதன் Unit of measure மூலமாக metric அளவுகளுக்கென இரண்டு தசமதானங்களைத் தெரிவு செய்க. Apply ⟶ ok இதன்போது எல்லா அளவுகளும் சென்ரிமீற்றரிலும் அதன் பகுதிகளிலும் காட்டலாம்.



Building Barஅனைத்து நிருமாணிப்பு நடவடிக்கைகளுக்கும் தேவையான துணைச் சாதனங்களைப் பெறுவதற்கு Building Bar பயன்படுத்தப்படும்.




Walls



Walls படவுருவின் மீது கிளிக்செய்து வேலைத்தளத்தின் மீது வரையும்போது கோடு வரையப்படுவதுடன் அது சுவராகப் பயன்படும். Catalog நிரலில் பயன்படுத்த வேண்டிய சுவர் வகை, அறை ஆகியன தெரிவுசெய்யப்பட வேண்டும். Preview இல் அதன் முப்பரிமாணத் தோற்றம் காட்சியளிக்கும்.

Door



வரையப்பட்ட கோட்டின்மீது உரிய இடங்களில் கதவுகளை உள்ளிட முடியும். அவ்வாறே, கதவு திறக்கும் திசையை மாற்றியமைக்க Right கிளிக்செய்து Flip Opening பயன்படுத்தப்படலாம். யன்னல்களுக்கென Window இனைப் பயன்படுத்தலாம்.

Roof by Perimeter



கூரையைத் தயாரிக்க Roof by Perimeter படவுருவினைப் பயன்படுத்தலாம். கூரைக்குத் தேவையான வடிவமைப்பை Catalog மூலமாகத் தெரிவு செய்யலாம்.


Interior Furniture



தயாரிக்கப்பட்ட இல்லத்தினுள் தளபாடங்களை இடுவதற்கு இந்தப் படவுரு உதவும். தெரிவுசெய்யப்பட்ட பொருளின் முப்பரிமாண Priview இல் இந்த தளபாடங்கள் பொருத்தமான அளவில் தெரிவுசெய்க. தளபாடங்களை சரியாக இடுவதன் மூலம் வீட்டு இடவசதியை முகாமை செய்யலாம்.


தளபாடங்களை இடும்போது Catalog திரையில் உள்ள எல்லா Folder களையும் திறந்து தளபாடங்களை அவற்றுக்குப் பொருத்தமானவாறு தெரிவுசெய்து கொள்ளலாம்.

Interior Lighting




இந்தப் படவுருவைப் பயன்படுத்தி தளபாடங்களுக்கு மேலதிகமான Interior Lighting மூலமாக மின்விசிறி, மின்விளக்குகள், வீட்டு மின் உபகரணங்கள் ஆகியன தெரிவு செய்யப்படும்.

Plumbing Fixtures




வீட்டின் உரிய இடங்களில் கழிவுவட்டகை, நீர்க்குழாய்ப் பிடி ஆகியவற்றை இட இந்தப் படவுரு உதவியாக அமையும்.

Building Bar இதிலுள்ள மெனுவைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டம் இரு பரிமாணத்தில் Priveiw இல் தென்படும். இவ்வாறான காட்சியொன்று கீழே தரப்பட்டுள்ளது.



அமைக்கப்பட்ட மனையலங்கரிப்புத்திட்டத்தின் முப்பரிமாணத் தோற்றத்தை பெறுவதற்கு View ⟶ Control மெனுவைப் பயன்படுத்தலாம்.



3D perspective

View ⟶ 3D Camara Views ⟶ 3D Perspective ⟶ Enter மூலமாக இதனை மேற்கொள்ளலாம் இங்கு வீட்டின் அளவீடுகள் காட்டப்படுவதுடன் உங்களால் இடப்பட்ட தளபாடங்களின் முப்பரிமாணத் தோற்றத்தைப் பார்வையிடலாம்.
நீங்கள் காட்சித்தளத்தை தயார்செய்யும்போது Camera இனூடாகத் தெரியும். Perspective இயல்புகள் தேவையான திசைக்கு அசைப்பதன் மூலமாக வீட்டினுள் காட்சிப்படுத்தச் செய்யலாம்.

Meterials paint brush



வீட்டுச் சுவர்களுக்கு நிறப்பூச்சு இடல், நிலத்துக்கு இடும் தரை ஓடுகள் ஆகியவற்றிணைப் பெற இந்த மெனு உதவும்.

தயாரித்த மனைத் திட்டத்தை பதிப்புச் செய்வதற்கு File ⟶ Print

திட்டத்தை வடிவமைப்புச் செய்ய File ⟶ Save as ⟶ File Name ⟶ Save

4 A o P |hA i UøPPO

4.1 பிரதேசத்தில் அதிகளவில் கிடைக்கும்வளங்களைப் பயன் படுத்தி மேற்கொள்ளக்கூடிய வணிக வாய்ப்புக்களை அறிந்துகொள்வோம்

இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களுக்கு,

- பிரதேசரீதியாக அதிகளவில் காணப்படும் வளங்களின் அடிப்படையில் தெரிவு செய்யக்கூடிய வணிக வாய்ப்புக்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்கும்
- வணிக வாய்ப்புக்களுக்கு அமைவாக உத்தேச உற்பத்திப் பொருளை விநியோகம் செய்யும் சந்தர்ப்பம் வரையிலான கருமங்களை அறிந்து, அவற்றைப் பயன்படுத்தவும்
- வணிக நடவடிக்கைகளின் போது நுகர்வோரின் நலன் கருதிச் செயற்பட்டு, சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றவும்

இயலுமாகும்.

சமூகமொன்றில் வாழும் தனிநபர்களின் தேவைகள், விருப்பங்களை நிறைவு செய்வதற்கென இலாபமீட்டும் நோக்கத்துடன் பொருள்கள், சேவைகளை வழங்குதலை வணிகமெனக் குறிப்பிடலாம்.

அதிகளவில் கிடைக்கத்தக்க வளங்களும் வணிக வாய்ப்புக்களும்

உங்களது வீட்டிலுள்ள உணவு, ஆடையணிகலன்கள், புத்தகங்கள், விளையாட்டுப் பொருள்கள், மின்சாரம் போன்றன தொடர்பாகக் கவனம் செலுத்தவும். அவற்றை உற்பத்தி செய்யும் போது பயன்படுத்தப்படும் வளங்களைப் பற்றி ஆராய்ந்து பாருங்கள். இவ்வனைத்து உற்பத்திகளுக்கும் மூலப்பொருள்கள், வலுச்சக்தி, இயந்திரங்கள், உபகரணங்கள், உழைப்பு, சேவைகள், அறிவு, தகவல்கள் போன்ற வளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை உங்களால் விளங்கிக் கொள்ள முடியும்.


பிரதேசரீதியாக அதிகளவில் பெறத்தக்க வளங்கள்

ஒவ்வொரு பிரதேசத்தினதும் பூகோளவியல் அமைவு, காலநிலை, மண்ணின் வளத் தன்மை, அப்பிரதேசத்தில் வாழும் மக்களின் கல்வி மட்டம், தொழிற்சாலைகளைக் கொண்டிருத்தல் போன்ற விடயங்களின் அடிப்படையில் பயன்படுத்தத்தக்க வளங்கள்

அமைக்கப்பெற்றிருக்கும். இவை அவ்வப் பிரதேசங்களில் இலகுவில் பெறத்தக்க வளங்களாகும்.

இவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளக்கூடிய வணிக வாய்ப்புக்களை இனங் காண்பதற்கு இவ்வொவ்வொரு பிரதேசத்திலும் இலகுவாகக் கிடைக்கத்தக்க வளங்களை நாம் இனங்காண வேண்டும். இலகுவில் பெறத்தக்க வளங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்து அவற்றைப் பரிசீலனை செய்வதன் மூலம் பொருத்தமான வணிக வாய்ப்புக்களைத் தெரிவுசெய்ய இயலும்.

தெங்குப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள வணிக வாய்ப்புக்கள்	கால் நடைகள் பரவலாகக் காணப் படும் பிரதேசங்களிலுள்ள வணிக வாய்ப்புக்கள்
 தேங்காயுடன் தொடர்புடைய உற்பத் திகள் உ+ம் :- ★ தேங்காயெண்ணெய் ★ கொப்பறா ★ அகப்பை ★ தும்புக்கயிறு ★ தும்புத் தூள் தென்னம் பூந்துணருடன் தொடர்பான உற்பத்திகள் உ+ம் :- ★ வினாகிரி ★ கருப்பட்டி ★ தென்னம்பாணி தென்னோலையுடன் தொடர்புடைய உற்பத்திகள் உ+ம் :- ★ தட்டு ★ பெட்டி ★ பாய்	 ● உடன் பால் விற்பனை ● உடன் பாலுடன் தொடர்புடைய உற்பத்திகள் உ+ம் :- ★ பால் ரொபி ★ யோகட் ★ வெண்ணெய் ★ பொதியிடப்பட்ட பால் ★ போத்தலில் அடைக்கப்பட்ட பால் ★ நெய் ★ தயிர் ● கூட்டுப் பசளை தயாரித்தல்

கடற்கரை சார்ந்த பிரதேசங்களில் மேற்கொள்ளக்கூடிய வணிகங்கள்	பழவகைகள் கிடைக்கும் பிரதேசங் களில் மேற்கொள்ளக்கூடிய வணிகங்கள்
 • உடன் மீன் • உடன் மீனுடன் தொடர்புடைய உற்பத்திகள் உ+ம் :- ★ ஜாடி கருவாடு ★ தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் ★ மாசிக் கருவாடு ★ கருவாடு	 • உடன் பழங்கள் • உடன் பழங்கள் தொடர்பான உற்பத்திகள் உ+ம் :- ★ சட்னி, ஜாம், பழச்சாறு ★ பழப்பானம்

மேலும், நபரொருவர் அல்லது நிறுவனமொன்று அல்லது அமைப்பொன்று வளமொன்றைப் பயன்படுத்திய பின்னர் கழிவாக அகற்றப்படும் பொருள்கள் வேறொருவருக்கு வளமாக அமையும்.

உ+ம் :- ஆடைத் தொழிற்சாலையிலிருந்து அகற்றப்படும் துண்டுப் புடவைகள் சிற்றளவு உற்பத்தியாளருக்கு வளமாகும். அவர் அவற்றிலிருந்து சிறுவர் ஆடைகள், துடைப்பம், புடவையாலான பொம்மைகள், விளக்குத்திரி போன்றவற்றை உற்பத்தி செய்து, விற்பனை செய்து பணமீட்டுவார்.

விசுக்கோத்து, பால்மா போன்றவற்றிலிருந்து கழிவாக அகற்றப்படும் வெற்று மேலுறைகள், பல்வேறு ஆக்கங்களை உருவாக்கப் பயன்படுத்தப்படும். மேலும் அலுவலகங்களிலிருந்து அகற்றப்படும் கடதாசிக் கழிவுப்பொருள்களை மீள் சுழற்சிக்கு உட்படுத்திய உற்பத்திகளாக மாற்றுவதன் மூலம் அல்லது அவற்றிற்கு வேறு புது வடிவமைப்பொன்றை அளிப்பதன்மூலம் மீண்டும் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன. வேறு நபரோ வணிகரோ பயன்படுத்தாத மூலப் பொருள்கள், அறிவு, நுட்பமுறை, வலுச்சக்தி போன்றவற்றைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமான உற்பத்திகளை மேற்கொள்வோரை புத்தாக்குநர் என அழைப்பர். புத்தாக்குநர்களுக்கு சகலதும் வளங்களாக அமையும்.

ö\ ¯Ø£õk 4.1

- உங்களது பிரதேசத்தில் இலகுவில் கிடைக்கத்தக்க ஏழு வளங்களைத் தெரிவுசெய்து அவ்வளங்களின் மூலம் மேற்கொள்ளக்கூடிய பல்வேறு வணிக வாய்ப்புக்களைப் பட்டியற்படுத்துக.

வணிக வாய்ப்புக்கள் (Business Opportunities)

போட்டித் தன்மையைக் கொண்ட சந்தையொன்றில் பல்வேறு பொருள்கள் மற்றும் சேவைகள் காணப்படும். வழங்குநர்களினால் அனைத்துத் தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்கு முடியாத சந்தர்ப்பங்களும் உண்டு. இது சந்தை **இடைவெளி** என அழைக்கப்படும். சந்தை இடைவெளியை அறிந்து கொள்ளும் முயற்சியாளர்கள் தேவைகள், விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு முன்வருவர். நுகர்வுத் தேவைகளை இனங்கண்டு **வணிக எண்ணக்கருவை** உருவாக்கிக் கொள்வர்.

சந்தைத் தேவையொன்றை நிறைவேற்றுவதற்காக முயற்சியாளரிடம் உருவாகும் சிந்தனையே வணிக எண்ணக்கருவாகும்.

வணிக எண்ணக்கருவொன்றை செயலுருப்படுத்துவதன் மூலம் வணிக வாய்ப் பொன்றைத் தெரிவுசெய்து கொள்ளும் முயற்சியாளர் அதனை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காகப் பின்வரும் விடயங்கள் மீது கவனம் செலுத்துவர்.

- நுகர்வோரின் தேவைகள், விருப்பங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு முற்படல்
- முதலீடுசெய்யும் பணத்திற்கும் ஏற்படக்கூடிய இடருக்கு ஏற்ற, போதுமான அனுகூலம் கிடைக்கக் கூடியதாக இருத்தல்

சந்தை

கொள்வனவாளர்களுக்கும் வழங்குநர்களுக்குமிடையில் கொடுக்கல் வாங்கல் இடம்பெறும் இடம் சந்தை எனப்படும்.

சந்தையொன்று பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படும்

- கொள்வனவாளர்கள்
- விற்பனையாளர்கள்
- இவ்விரு பிரிவினர்களுக்குமிடையிலான கொடுக்கல் வாங்கல்கள்

சிலசமயம் இம்மூன்று விடயங்களையம் ஒரே இடத்தில் ஒரே சந்தர்ப்பத்தில் காண முடியாத சந்தர்ப்பங்களும் உண்டு. சர்வதேச வியாபாரமானது வலையமைப்பினூடாக இடம்பெறும் வியாபாரமாகும் (E - marketing) வீட்டிலிருந் வாறீ பொரு ள்கள்

சேவைகளைப் பெற்றுக் கொள்ளல், பத்திரிகை உட்பட ஏனைய ஊடகங் களினூடாக மேற்கொள்ளும் வியாபாரங்களை இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

பொதுவாக, சந்தை போட்டித் தன்மையானதாகும். வணிகரொருவர் சந்தையில் பிரவே சிக்க முன்னர் சந்தை தொடர்பாக ஆய்வுசெய்து பெற்றுக் கொள்ளக்கூடிய தகவல்கள் மற்றும் இதற்கமைய பல்வேறு தீர்மானங்களை மேற்கொள்ளும் முறை என்பன தொடர்பாகவும் இங்கு அவதானம் செலுத்தப்படும். சந்தை ஆய்வு தொடர்பான விடயங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- நுகர்வோர் தேவைகளும் விருப்பங்களும்
- நுகர்வோரின் கொள்வனவுச் சக்தி
- இலக்குச் சந்தை
- பொருள் விநியோக வழிமுறை
- விற்பனை மேம்பாட்டு உபாய முறை
- நுகர்வோரால் எதிர்பார்க்கப்படும் தரப் பண்புகளும் நியமங்களும்
- நுகர்வோர் திருப்தி
- சந்தை பரந்துள்ள முறை
- சந்தைத் துண்டமாக்கல்
- பொருள்களை விளம்பரம் செய்யக்கூடிய முறை
- நுகர்வோரைத் தக்கவைத்துக் கொள்வதற்கான முறை

சந்தை ஆய்வு

சந்தை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக சந்தை ஆய்வு மேற் கொள்ளப்படும். பல்தேசியக் கம்பனிகளின் ஊழியர்கள் அவர்களது உற்பத்திகளை நுகர்வோருக்குச் சமர்ப்பித்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறையை சில சந்தர்ப்பங்களில் நீங்கள் கண்டிருப்பீர்கள். அது சந்தை ஆய்வுக்கான உபாய வழிமுறையாகும். சந்தை ஆய்வு பல்வேறு வகைப்படும்.

- சந்தைப் பரிசீலனை
- சந்தையை அவதானித்தல்
- வினாக்கொத்து சமர்ப்பித்தல்

இவ்வனைத்து முறைகளும் பொருளொன்று தொடர்பாக நுகர்வோரின் நடத்தைக்குரிய தகவல்களைச் சேகரிப்பதற்காகவே இடம் பெறுகின்றன.

- **சந்தை பரிசீலனை**

உற்பத்தியாளரினால் பொருள்களின் சில மாதிரிகள் முன்வைக்கப்பட்டு இப் பொருள்கள் மீதான நுகர்வோர் விருப்பு, விலை, தரம், இலகுவாகக் கொள்வனவு செய்யக்கூடிய தன்மை போன்றவை பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு தகவல்களைப் பெற்றுக்கொள்வது சந்தைப் பரிசீலனையின்போது இடம்பெறும்.

- **சந்தை அவதானிப்பு**

பொருள்களைப் பயன்படுத்தும் நுகர்வோரின் நடத்தைப் போக்குகள் தொடர்பான தகவல்கள் சந்தையை அவதானிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும். நுகர்வோர் அறியாதவகையில் அவர்களால் பொருள்களின்மீது காட்டப்படும் விருப்பு, விருப்பமின்மை போன்ற விடயங்களில் அவதானம் செலுத்தப்பட்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் இதன் பொருளாகும்.

- **வினாக்கொத்து சமர்ப்பித்தல்**

பொருள்கள் பற்றிய சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதை இலக்காகக் கொண்டு வினாத்தொகுதியொன்று எழுத்துமூலமோ வாய்மொழிமூலமோ சமர்ப்பிக்கப் படும். நோக்கத்திற்கமைய வினாக்களைத் தயாரித்தல் தேவையற்ற வினாக்களை சமர்ப்பிக்காதிருத்தல், சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு வினாக்களை ஒழுங்கமைத்துக்கொள்ளல், வினாக்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்படல், இலகுவாக விளக்கம் பெறக்கூடியதாக இருத்தல், தகவல்களை வழங்குபவர் அழுத்தங்களுக்கு உட்படாதிருத்தல், விடையளிப்பதற்குத் தேவையான கால அவகாசம் வழங்கல் போன்ற விடயங்கள் தொடர்பாக வினாக்களைத் தயாரிக்கும் போது கவனம் செலுத்த வேண்டும்.

உதாரணமாக உடனடியாகத் தயாரிக்கக்கூடிய உணவு வகையொன்றைச் சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கும் முயற்சியாளரொருவரால் சந்தை ஆய்விற்காக முன்வைக்கப்பட்ட வினாக்கொத்தொன்று வருமாறு,

வினாக்கொத்து

01. வாழும் பிரதேசம் : ....

02. ஆண்/ பெண் : ....

03. வயது : ....

04. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை : ....

05. தொழில் : ....

06. மாதாந்த வருமானம் : ....

07. தேநீருடன் பரிமாறத்தக்க உடனடியாகத் தயாரிக்கக் கூடிய துணை உணவு வகைகள் ஐந்தை உங்களது விருப்பத்தினடிப்படையில் ஒழுங்கு முறைப்படி குறிப்பிடவும்.

1. .... 2. ....
3. .... 4. ....
5. ....

08. உங்கள் எதிர்ப்பார்ப்புகளை எழுதி அல்லது வரைந்து காட்டவும்

1. சுவை .... 2. வகை ....
3. நறுமணம் .... 4. வடிவம் ....
5. அளவு ....

09. உங்களால் செலுத்தக்கூடிய விலைமட்டம் ....

10. உங்களால் இலகுவாகப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய இடங்கள் ....

சந்தை ஆய்வு மூலம் பெறப்பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்து மேற்கொள்ளக் கூடிய தீர்மானங்களாவன,

- நுகர்வோருக்குத் தேவையான பொருள்கள் அல்லது சேவைகள்
- சந்தைக்கு வழங்க வேண்டிய அளவு
- செலுத்தக்கூடிய சராசரி விலை
- விற்பனை முறை
- இலக்கு நுகர்வோர் தொகுதி

ö\¯Ø£õk 4.2

உங்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கான சந்தை ஆய்வுக்கென சிறிய வினாக்கொத்தொன்றைத் தயாரிக்கவும்.

சந்தைத் துண்டமாக்கல்

உற்பத்தியாளருக்கு மொத்த விற்பனைச் சந்தையில் காணப்படும் சகல நுகர்வோரையும் ஒரே வகைப்பட்ட பொருளொன்றினால் அல்லது சேவையினால் திருப்திப்படுத்த முடியாது. எனவே, உற்பத்தியாளர் சந்தையைப் பல பகுதிகளாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். இதனூடாக, பல்வேறு வகைப் பொருள்கள் சேவைகளுக்கு விருப்பமுடைய வாடிக்கையாளர்களை இனங்காண முடியும். முன்வைக்கப்படும் பொருள்கள் சேவைகளுக்கு விருப்பமுடைய ஓரினத்தன்மை கொண்ட நுகர்வோர் குழுவொன்றை உள்ளடக்கக் கூடியவாறு சந்தையை சிறிய பிரிவுகளாக வகைப்படுத்தல் சந்தைத் துண்டமாக்கல் என அழைக்கப்படும்.

பாதணிகளை உற்பத்திசெய்து சந்தைக்கு முன்வைப்பதற்கு உத்தேசித்திருக்கும் உற்பத்தியாளரொருவரின் சந்தைத் துண்டமாக்கலுக்குரிய உதாரணம் வருமாறு,

பொருள்	அடிப்படைகள்	நுகர்வோர் குழு
	வயதின் அடிப்படையில்	சிறுவர், இளைஞர், முதியோர்
	பால் வேறுபாட்டின் அடிப்படையில்	ஆண், பெண்
	வருமானத்திற்கமைய	கூடிய வருமானம், நடுத்தர வருமானம், சாதாரண வருமானம்
பாதணி	தொழிலின் அடிப்படையில்	நிறைவேற்று அதிகாரிகள், அலுவலக ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள்
	பயன்படுத்தப்படும் முறைக்கமைய	சாதாரணமான கிராமமொன்றிற்கு பண்டிகைக்கமைய, உற்சவ சந்தர்ப்பத்திற்கமைய, விளையாட்டு சந்தர்ப்பமொன்றிற்கு



சந்தையில் காணக்கூடிய சில பாதணி வகைகள்

இலக்குச் சந்தையொன்றை, துண்டமாக்கல் செய்ய வேண்டிய முறையைத் தீர்மானிக்கும் பொழுது உற்பத்தியாளரொருவர் அறிந்துகொள்ள வேண்டிய சமூகக் காரணிகள் வருமாறு,

- வயது
- தொழிலும் வருமானமும்
- பால் வேறுபாடு
- வாழ்க்கைப் போக்கு
- பூகோளரீதியான அமைவிடம்
- இன, மத, மொழி வேறுபாடு
- எதிர்பார்ப்புகள்
- தேவைகள், விருப்பங்கள்

இவ்வாறு சந்தைத் துண்டமாக்கலினூடாக உற்பத்தியாளர் சந்தையில் ஓரினத்தன்மை கொண்ட நுகர்வோர் குழுக்கள் பலவற்றை வகைப்படுத்தி அவ்வொவ்வொரு குழுவுக்கும் பல்வேறு வகைப்பட்ட உற்பத்திப் பொருள்களை சமர்ப்பிப்பதே எதிர் பார்க்கப்படுகின்றது. இதன்மூலம் நுகர்வோரைத் திருப்திப்படுத்துவது மட்டுமன்றி சந்தையை வெற்றிகொள்வதும் இலகுவாக அமையும்.

எந்தவொரு சந்தையையும் துண்டமாக்கல் மூலம் தெரிவுசெய்து ஓரினத்தன்மை கொண்ட நுகர்வோர் குழுவிற்கு விசேட அனுகூலத்தைப் பெற்றுக் கொடுப்பதற் குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. உதாரணமாக, சிறு பிள்ளைகளின் பாதணிகளில் அவர்கள் விரும்பும் மிருகங்களின் படங்கள், ஒளிர்ந்து அணையும் தன்மை கொண்ட மின்விளக்குகள் அல்லது ஒலியெழுப்பும் உத்திகளைப் பொருத்துல் என்பவற்றைக் குறிப்பிட்டுக் காட்ட முடியும்.





இலக்குச் சந்தையைத் (Target Market) தெரிவுசெய்தல்

பொருளொன்றை கொள்வனவு செய்வதற்கு முன்னரும் பின்னரும் நுகர்வோர் திருப்தி அடையும் முறையிலேயே பொருளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர் நீண்ட காலத்திற்குச் சந்தையில் நிலைத்திருப்பர். இதற்காக நுகர்வோர் தேவைகள், விருப்பங்களை இனங்கண்டு தனது பொருளை மொத்த விற்பனைச் சந்தையில் இருக்கும் நுகர்வோரில் எப்பிரிவினருக்கு முன்வைக்கப்படுகின்றது என்பதனை அறிந்து வைத்திருத்தல் வேண்டும். இதற்கான உதாரணமொன்றில் கவனம் செலுத்து வோம்.

பால்மா மொத்த விற்பனைச் சந்தைக்கு முன்வைக்கப்படும் பொருளொன்றாகும். ஆயினும், பால்மா வகைகள் அனேகம் உள்ளன.

- குழந்தைளுக்கான பால்மா
- முதிர்ந்தோருக்கான பால்மா
- நோயாளர்களுக்கான பால்மா
- பல்வேறு சுவைகள் கொண்ட பால்மா

ஒவ்வொரு இலக்கு நுகர்வோர் பிரிவினரதும் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் பொருட்டே பால்மா வகைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இலக்குச் சந்தையைத் தெரிவு செய்வதன் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள்

- தனது நுகர்வோர் பிரிவினரைத் தெரிவுசெய்யக் கூடியதாக இருத்தல்
- நுகர்வுத் தேவைகளை வேறுபடுத்தி இனங்காண்பது இலகுவாக அமைதல்
- தேவையான அலகுப் பெறுமானத்தைத் தீர்மானிக்க முடிதல்
- தன்னால் உற்பத்தி செய்யப்படும் பொருளை பல்வகைமைப்படுத்துவது இலகுவாக அமைதல்
- விற்பனை மேம்படுத்தல் கருமங்களை மேற்கொள்ள இலகுவாதல்

சந்தையின் போட்டித் தன்மைக்கு முகம்கொடுப்பதற்குத் தேவையான தரமும் நியமங்களும்

நுகர்வோரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்க சகல அம்சங்களையும் உற்பத்தியானது உள்ளடக்கியிருப்பதே தரம் எனக் கருதப்படும். தரரீதியான பொருளொன்றின் செயற்பாட்டுத் தன்மை அல்லது நீடித்த பயன்பாடு, நம்பகத் தன்மை, செம்மை, நுகர்வோர் தேவைகளை நிறைவேற்றுதல் என்பவையே தரமான பொருளொன்றின் அம்சங்களாகக் கருதப்படுகின்றன.

யாதேனும் உற்பத்தியொன்றில் இருக்க வேண்டிய சேர்மானங்கள், அறிவுறுத்தல்கள், சேர்வைகள், தரரீதியான அம்சங்கள் என்பன சுட்டிக் காட்டப்பட்டு அவற்றுக்கமைய உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிபடுத்தப்பட்டு வழங்கப்படும் சான்றிதழே தரநியமச் சான்றிதழ் ஆகும். இச்சான்றிதழ் இலங்கையில் எனில் தரக்கட்டளைகள் நிறுவனம் மூலம் SLS தரக் குறியீடு எனும் பெயரிலும், சர்வதேச ரீதியாக எனின் சர்வதேச தரநியம நிறுவனத்தின் மூலமும் ISO எனும் பெயரிலும் வழங்கப்படுகின்றன.

சந்தையின் போட்டி நிலைமைகளுக்கு முகங்கொடுத்து வெற்றிகொள்வதற்காக தரத்தன்மை நியமம் ஆகிய இரு நிலைமைகளும் மிக முக்கியமாக இருக்க வேண்டிய அங்கங்களாகும். இவ்வாறான பொருளொன்றினூடாக நுகர்வோர் விடயங்களுக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் அனைத்தும் நுகர்வின் பின்னர் கிடைக்கப்பெறும். இதனால் பூரண திருப்தியை அடைவர். இந்த வகையில் நுகர்வோரை வெற்றி கொள்வதன் மூலம் சந்தையை விரிவுபடுத்திக் கொள்வதற்கு உற்பத்தியாளருக்கு பொருளின் தரத்தன்மை துணையாக அமையும்.

வழங்கற் சங்கிலித் தொடர் (Supply chain)

பொருளொன்றை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வளங்களை, வழங்குவது தொட்டு இறுதிக் கொள்வனவாளர் வரையில் இடம்பெறுகின்ற செயல்முறையின் போது தொடர்புபடும் நிறுவனங்கள், மனிதர், செயல்முறைகள், தகவல்கள், பிற வளங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய முறைமையே வழங்கற் சங்கிலி எனப்படும்.

வணிக உலகில் உற்பத்தியின் சங்கிலியின் ஒரு இணைப்பு மட்டுமே ஆவான். உற்பத்தியொன்றின்போது அனேக இணைப்புக்கள் தொடர்புபடுகின்றன. உற்பத்தியை முற்பக்க இணைப்புக்கள், பிற்பக்க இணைப்புக்கள் எனும் வகையில் வகைப்படுத்த முடியும். மூலப்பொருள்கள், தகவல்கள், ஏனைய வளங்கள் என்பவற்றை வழங்கி உற்பத்தி செய்வதற்கு முன்னர் பங்களிப்புச் செய்கின்ற வழங்குநர்கள் முன்பக்க இணைப்புக்கள் என்றழைக்கப்படும். பொருள்களை உற்பத்தி செய்ததன் பின்னர் இறுதி நுகர்வோரின் கரங்களுக்கு கிடைக்கும் வரையில் மட்டுமன்றி பின்னர் தேவைப்படும் சேவைகளுடன் தொடர்புறும் அனைத்துப் பிரிவினர்களும் பிற்பக்க இணைப்புக்கள் எனப்படுவர்.

எந்தவொரு உற்பத்தியின்போதும் தொடர்புபடும் பிரிவினர்கள் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.

சந்தைத் தேவைகளை இனங்காணல்

↓

ஆக்கம்

↓

உளளீடுகளை இனங்காணல்

↓

வழங்குநர்கள்

↓

மொத்த உற்பத்திச் செயன்முறைகள்

↓

உற்பத்தி

↓

பொதியிடல்

↓

களஞ்சியப்படுத்தல்

↓

விநியோகம்

↓

இறுதி நுகர்வோன்

↓

நுகர்வின் பின்னரான சேவை

சந்தையும் வழங்கற் சங்கிலியும்

விளையாட்டு பொம்மை யொன்றை உற்பத்தி செய்தல்

↓

துணி, பஞ்சு, நூல், ஊசி, பொத்தான், உழைப்பு, தொழில்நுட்பம், தகவல் ஏனையவை

↓

வழங்குநர்கள்

↓

அளவுத்திட்டத்தைத் தயாரித்தல்
வடிவமைப்பை வெட்டுதல்
தைத்தல், பஞ்சு நிறைத்தல்

↓

பொதியிடல்

↓

களஞ்சியப்படுத்தல்

↓

விநியோகம் செய்தல்

↓

மொத்த வியாபாரி → சில்லறை வியாபாரி → இறுதி நுகர்வோன்

↓

நுகர்வின் பின்னரான சேவை




விளையாட்டுப் பொம்மை உற்பத்திச் செயன்முறை

பொருள் விநியோக வழிமுறைகள் (Distribution channels)

உற்பத்தியாளரினால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், நுகர்வோரின் கைகளுக்கு மாற்றப்படும் செயன்முறை **விநியோகம்** என அழைக்கப்படும். நுகர்வோரால் இலகுவாகப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு வழிவகை செய்தலே இதன் முக்கிய நோக்கமாகும். இப்பொருள் விநியோகச் செயன்முறைச் சங்கிலியில் பல்வேறு பிரிவினர் தொடர்புபடுகின்றனர். உற்பத்தியாளர் நேரடியாக நுகர்வோருடன் தொடர்புபடாத சகல சந்தர்ப்பங்களிலும் பொருள் விநியோகத்திற்காக இடைத் தரகர்களின் சேவை மிக அவசியமானதாக உள்ளது.

விநியோக வழிமுறைகள் தொடர்பான விளக்கத்தை பின்வரும் பாய்ச்சற் கோட்டு வரிபடத்தின் மூலம் அறிந்துகொள்ள முடியும்.



விநியோக வழிமுறைகள்

உற்பத்தியாளரொருவர் பொருள்களை விநியோகிப்பதற்குப் பொருத்தமான விநியோக வழிமுறையொன்றைத் தெரிவு செய்யும்போது கவனம்செலுத்த வேண்டிய பல விடயங்கள் உள்ளன. பொருளின் தன்மை, விநியோகக் கிரயம், போட்டி நிறுவனங்கள் பயன்படுத்தும் விநியோக வழிமுறைகளைப் பயன்படுத்துவதற்கான வசதி, சந்தை விரிவுபட்டிருக்கும் முறை, விநியோகிப்பதற்கு எடுக்கும் காலம் என்பன அவற்றில் சிலவாகும். உற்பத்திப்பொருள் நுகர்வோரை அடையச் செய்வதற்காக இடைத்தரகர்களைப் பயன்படுத்துவதன் காரணமாக உற்பத்தியாளரின் பணி இலகுவானதாக அமையும். உற்பத்தி நடவடிக்கைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டால் அவரது பணிகளை மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளக் கூடியதாக இருப்பினும், இலாபப் பங்கு குறைவடையும். பொருளின் விலையுடன் விநியோகக் கிரயமும் சேர்க்கப்படுவதனால் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டாலும் இடைத்தரகர்கள் இன்றி நுகர்வோனுக்கு இலகுவாகப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாது போகும்.

ö\ ¯Ø£õk 4.3

உங்களது வீட்டிற்கு கொள்வளவு செய்யப்பட்ட பொருள்களைத் தெரிவு செய்து அவற்றைப் பெற்றுக்கொண்ட முறைகளைப் பின்வரும் அட்டவணையில் குறிக்கவும்.

தொடர் இல	பொருள்	பெற்றுக்கொண்ட முறை			
		உற்பத்தியாளரிடமிருந்து	மொத்த வியாபாரியிடமிருந்து	சில்லறை வியாபாரியிடமிருந்து	முகவர் மூலம்
01.	மண் சட்டி				
02.	....				
03.	....				

வணிகத்திற்குரிய சமூகப் பொறுப்பு

வணிகர்களினால் தமது வாடிக்கையாளர்களுக்கு மட்டுமன்றி சமூகத்தில் வாழும் சகல பிரிவினர்களுக்கும் நியாயமாக செயலாற்றுவதே வணிகத்திற்குரிய சமூகப் பொறுப்பாகக் கருதப்படுகின்றது. வணிகத்தின் பிரதான நோக்கம் இலாபம் ஈட்டுவது என்பது நீங்கள் அறிந்த விடயமாகும். ஆயினும், சமகாலத்தில் வணிகம் விரிவடைந்து, போட்டி நிலைமை அதிகரித்துள்ளதுடன் வணிகங்களின் பொறுப்பு, இலாபம் உழைப்பதில் மட்டும் மட்டுப்படுத்தப்படாது வணிகத்தின்மீது அக்கறை செலுத்தும் அனைத்துப் பிரிவினர்களுக்கும் அனுகூலங்களைக் பெற்றுக்கொடுக்க வேண்டுமென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் முக்கியத்துவம்

வணிக உலகம் விரிவடைந்துள்ளதுடன் போட்டித் தன்மை, கைத்தொழில்மயமாதல், புதிய தொழினுட்ப விருத்தி, இலத்திரனியல் வணிகம், பூகோளமயமாதல் மட்டு மன்றி பல்தேசியக் கம்பனிகளின் தோற்றம் என்பன காரணமாக வணிகச் செயற் பாடுகள் சமூகத்திற்குப் பாதகமான வகையில் தாக்கத்தை ஏற்படுத்தும். பொதுவாக சமூகத்தில் ஏற்படும் இப்பாதகமான செயற்பாடுகளின் தீங்குகள் தொடர்பாக அனேகமானவர்களின் அவதானத்திற்குட்பட்டது. இதனடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபை 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் தொட்டு வணிகங்களின் சமூகப் பொறுப்புக்கள் சரியான முறையில் நிறைவேற்றப்படுவது பிரதான இலக்காக அறிமுகப்படுத்தியுள்ளது. வணிகங்களின் மானிட நேசிப்புத் தன்மையும் உணர்வு பூர்வமான நிலையும் சமூகப் பொறுப்பாகும் எனவும் சமூகப் பொறுப்புடன் செயற்படும் வணிகங்கள் சமூகத்திற்கு சிறந்ததாக இருக்கும் எனவும் மிக நிலையானதும் ஆரோக்கியம் கொண்டதுமாக

இயங்கக்கூடிய உலகமொன்றை நோக்கிப் பயணிப்பதற்காக அனைத்து நாடுகளும் வணிகப் பங்காளர்களாக இருத்தல் வேண்டும் எனவும் வணிகச் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்களாக இல்லாதிருத்தல் வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று ஒரு நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி வணிகர்கள் பல்வேறு வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டு இலாபம் ஈட்டுகின்றனர். அரசு, மக்களிடமிருந்து அறவிட்ட வரிப்பணத்தைப் பயன்படுத்தியே உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது. இவ்வாறான வகையில் வணிகர்களுக்கு இலாபம் ஈட்டுவதற்காக பொதுமக்கள் மறைமுகமான வகையில் பங்களிப்பை வழங்கியுள்ளனர். இவ்வாறு தமக்கு இலாபத்தை ஈட்டுவதற்குப் பங்களிப்புச்செய்த சமூகத்தின் சகல பிரிவினர்களுக்கும் நியாயமான வகையில் கருமமாற்றுவது வணிகர்களின் சமூகப் பொறுப்பாக உள்ளது.

வணிகங்களை நடாத்திச் செல்லும்போது வணிகத்திற்குரிய சமூகப் பொறுப்புக்களை கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்ற முடியும்.

- ★ சமூக அபிவிருத்தி
- ★ சூழல்நேய வணிகங்கள்
- ★ நுகர்வோரின் நலனில் கவனம் செலுத்துதல்

சமூக அபிவிருத்தி

நுகர்வோர் திருப்தியடையும் வகையில் வணிகர்கள் கருமமாற்றுவதுடன் அவர்களுடன் தொடர்புபடும் ஏனைய பிரிவினர்களான ஊழியர்கள், முதலீட்டாளர்கள், பொதுமக்கள் போன்றோர் சார்பாகவும் சில பணிகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. பல்வேறு வணிகங்களை உருவாக்கி மக்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக வேலைவாய்ப்புக்களை வழங்கி சமூக அபிவிருத்திக்குப் பாரியளவிலான பங்களிப்பை வணிகர்கள் வழங்குகின்றனர்.

சூழல்நேய வணிகங்கள்

வணிக நடவடிக்கைகள் மூலம் சூழல் மாசடையும், அவ்வாறு இல்லாத வகையில் சூழலை நேசிக்கக்கூடிய வகையில் செயற்பட வேண்டியது வணிகர்களின் சமூகப் பொறுப்பாகுமென இன்று அனேகமானவர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வணிகச் செயற்பாடுகளின் காரணமாக சூழல் மாசடைவதன் மூலம் கொடிய நோய்கள் பரவுதல், அசுத்தமான காற்றை சுவாசிப்பதன்மூலம் சுவாச நோய்கள் தொற்றுதல், உளரீதியான தளர்வு, உடற்குறைபாடுகள் ஏற்படல் போன்றன மனிதர்களுக்குச் சிரமங்களை ஏற்படுத்தக்கூடியனவாகும். சூழல் மாசடைதலில் பின்வரும் வணிகக் கருமங்கள் தாக்கத்தை ஏற்படுத்தும்.

★ தொழிற்சாலைகளிலிருந்து அகற்றப்படும் நீர், கழிவுப் பொருள்கள் என்பவற்றை சூழலிற்கு வெளிவிடல்

★ தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சுவாயுக்களை சட்ட திட்டங்களுக்கு முரணான வகையில் சூழலில் விடுவித்தல்

★ சிதைவடையாத மேலுறைகளைப் பயன்படுத்துவதனால் அவை சூழலில் ஒன்று சேர்தல்

★ இளநீர், செவ்விளநீர்க் கோம்பைகள், சிதைவடையாத பொலித்தீன், பிளாத்திக்கு மூடிகள், பெற்றோலிய உற்பத்திகளிலுள்ள ஈயம் போன்றவற்றுடன், டயர், கைவிடப்பட்ட சுரங்கங்கள், கல் உடைக்கும் இடம் போன்றனவற்றை ஒழுங்கான முறையில் அழித்துவிடவோ மூடிவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்காமை

★ பொதுமக்கள் பரவலாக வாழும் சூழலில் தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலம் சூழல் மாசடைதல்


தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் புகை


தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரை நீர்முதல்களில் விடுவித்தல்


பயிர்ச்செய்கையின்போது முயற்சியாளர்கள் பூச்சி நாசினிகளைத் தெளிப்பதன் மூலம் சூழல் மாசடைதல்


சிறு வணிகர்கள் கழிவுப் பொருள்களை ஒழுங்கான முறையில் முகாமைத்துவம் செய்யாமையினால் சூழல் மாசடைதல்

சமூகமொன்றில் வாழும் சகல பிரிவினர்களுக்கும் நியாயம் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வது வணிகங்களின் சமூகப் பொறுப்பாகும். மேலே குறிப்பிடப்பட்ட சூழல் மாசடையும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டாத வகையில்

சூழல்நேயமாகச் செயற்படுவதற்கு பின்வரும் கருமங்கள் வணிகர்கள்மூலம் நிறை வேற்றப்பட வேண்டும்.

- சூழலுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையையும் வணிகத் திற்காகத் தெரிவு செய்யாது இருத்தல்
- இயற்கைச் சூழல் வலய அழிவு ஏற்படும் வகையில் மேற்கொள்ளப்படும் இலாபம் ஈட்டக் கூடிய நடவடிக்கைகளை குறைத்தல்
- தொழிற்சாலைகள் மூலம் மட்டுமன்றி ஏனைய சிற்றளவு வணிகங்களினாலும் அகற்றப்படும் கழிவுப் பொருள்கள், கழிவுநீர், நச்சு வாயுக்கள் என்பவற்றை சரியான முகாமைத்துவ சட்ட விதிமுறைகளுக்கமைய சூழல்நேயமான வகையில் அகற்றுதல்
- வணிக ரீதியான விவசாய நடவடிக்கைகளின்போது பூச்சி நாசிகளைத் தெளித்தல், இரசாயனப் பசளைப் பயன்பாடு என்பன மூலம் நீரை அசுத்தமானதாக மாற்றாதி ருப்பதற்கு வழிவகை செய்தல்
- இளநீர், மற்றும் செவ்விளநீர் வியாபாரம், இரத்தினக்கற் சுரங்கம், கல்லுடைத்தல் என்பவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் வணிக நடவடிக்கைகளை நடாத்திச் செல்லும்போது நீர் தேங்கி அங்கு நுளம்புகள் பெருகுவதன் மூலம் சூழலுக்குப் பாரியளவிலான பாதிப்பு ஏற்படுவதால், நீர் தேங்கிநிற்கக் கூடிய அனைத்தையும் மூடி விடுவதற்கு வழிவகை செய்தல் வேண்டும்.
- எல்லா உற்பத்தி நடவடிக்கைகளின் போதும் இலகுவில் சிதைவடையும் சூழல் நேயமான வளங்களைப் பயன்படுத்துவதற்கு முற்படல்
- வளங்களை முறையற்ற வகையில் பயன்படுத்தாது வணிகங்களில் ஈடுபடல்

சூழல்நேயமிக்கதாகக் கருமமாற்றும் வணிகர்கள் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றுக் கொள்வதோடு மட்டுமன்றி அரசவிருதுகளையும் பெற்றுக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

ö\¯Ø£õk 4.4

- உங்களது பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையின் சூழலைப் பாதுகாப் பதற்குப் பின்பற்ற வேண்டிய விடயங்களை உள்ளடக்கிய சிறிய அறிக்கை யொன்றைத் தயாரிக்க.
- உங்கள் பிரதேச வணிகர்களினால் சமூகத்துக்குத் தீங்கிழைக்கக் கூடிய வகையில் சூழல் மாசடைதலை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்கள் உங்களால் இனங்காணப்பட்டிருப்பின் அவற்றைப் பட்டியற்படுத்துக, அவற்றைக் குறைப்பதற்காக உங்களது ஆலோசனைகளை முன்மொழிக.

நுகர்வோனின் நலனில் அக்கறை செலுத்துதல்

வணிகரின் சேவையைப் பெறுபவர் நுகர்வோராவர். அவர்கள் எவ்வேளையிலும் நுகர்வோரைத் திருப்திப்படுத்துவதற்காக அவர்களது தேவை, விருப்பங்களைக் கேட்டறிந்து தேவையான பொருள்கள், சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். இவ்வாறு நுகர்வோர் திருப்தியடையும் வகையில் பொருள்கள், சேவைகளை வழங்குவது வணிகங்களின் சமூகப் பொறுப்பாகும். இங்கு நுகர்வோருக்கு நேர்மையுடையதாக இருத்தல், மோசடிகளினின்று தவிர்த்திருத்தல், நியாயமானதாகவும் கண்ணியப்படுத்தக்கூடியதாகவும் மதித்தல் என்பன வணிகர்களினால் மேற்கொள்ள வேண்டியவைகளாகும். இதற்காக வணிகர்களினால் பின்வரும் வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

- பொருள்கள், சேவைகள் தொடர்பான சரியான தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்
- பொருள்கள் சேவைகள் தொடர்பாக தேவையான விடயங்களை மாற்றம் செய்யாது வழங்கல் (நுகர்வோருக்கு மோசடி செய்யாதிருத்தல்)
- விலை மற்றும் ஏனைய நடவடிக்கைகளை உடன்பாட்டிற்குட்பட்டவாறு நிறைவேற்றுதல்
- தரமான பொருள்களை நுகர்வோருக்குப் பெற்றுக் கொடுத்தல்

இவ்வாறு நுகர்வோரின் நலன்களில் கவனம் செலுத்தி கருமமாற்றும் ஒழுக்க விழுமியங்களைக் கொண்ட வணிகர்களின்பால் நுகர்வோர் ஈர்க்கப்படுவர். நுகர்வோரை நன்னிலைப்படுத்தக் கூடிய தகவல்களை முன்வைத்து ஊழல் மோசடிகளில் ஈடுபடாமை காரணமாக அவர்களது பொருள்கள் சேவைகளைக் கூடுதலாகக் கொள்வனவு செய்வதற்குத் தூண்டப்பட்டு இலாபம் அதிகரித்து நாளுக்கு நாள் வெற்றியை நோக்கிச் செல்ல முடியும்.

4.2 விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்

இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களுக்கு,

- உற்பத்திகளுக்குப் பொருத்தமான விளம்பர முறைகளைப் பயன்படுத்துவதற்கும்
- குறுங்காலத்தில் விற்பனையை அதிகரிப்பதற்காக விற்பனை மேம்படுத்தல் உபாய வழிமுறைகளை வாய்ப்புப் பார்க்கவும்
- விற்பனை மேம்படுத்தல் வழிமுறையொன்றைச் செயற்படுத்தக்கூடிய ஆக்கமொன்றைத் தயாரிப்பதற்கும்
- கணினி மென்பொருள்களினூடாக விற்பனை மேம்படுத்தல் வழிமுறை யொன்றிற்கான ஆக்கமொன்றைத் தயாரிக்கவும்

இயலுமாகும்.

வணிகர் தமது பொருள்களுக்கான சந்தைக் கேள்வியை அதிகரித்துக்கொள்ள வேண்டும். இதற்கமைய பொருள்களின் விசேட பண்புகள் பயன்கள் என்பன தொடர்பான தகவல்களை நுகர்வோருக்கு முன்வைத்தல் வேண்டும்.

விளம்பரம் (Advertising)

வணிகரொருவர் தமது பொருள்களுக்குச் சந்தையில் எதிர்காலக் கேள்வியை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் அவற்றின் விசேட பண்புகள், பயன்கள் தொடர்பான தக வல்களை முன்வைத்து குறிப்பிட்ட செலவொன்றைச் மேற்கொண்டு, நுகர்வோருக்கு அறிவூட்டுதலே விளம்பரமாகும்.

விற்பனையை அதிகரிப்பதே விளம்பரத்தின் அடிப்படை நோக்கமாகும். அவ்வாறு விற்பனை அதிகரிக்காதுவிடுமாயின் விளம்பரச் செலவானது வீணான செலவாகிவிடும். ஆயினும், சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட விளம்பரமொன்றினூடாக, விற்பனை அதிகரித்து கேள்வி உயர்வடைந்து இலாபம் அதிகரிக்கும். உற்பத்தியாளரின் இலாபம் அதிகரிக்கும்போது விலையைக் குறைத்து வாடிக்கையாளருக்கு அனுகூலத்தை வழங்க முடியும்.



தைக்கப்பட்ட ஆடைகளை விற்கும் வணிகரொருவரின் விளம்பரமே மேலே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. சந்தையை விரிவுபடுத்திக் கொள்ளும் நோக்கத்தை மையமாகக் கொண்டு அவற்றைத் தனது போட்டியாளர்களின் உற்பத்திகளிலிருந்து வேறுபட்ட விதத்தில் பொதிசெய்து காட்சிப்படுத்தி விசேட பண்புகள், பயன்கள் தொடர்பான தகவல்களை முன்வைத்து நுகர்வோரை அறிவூட்டுவதே இந்த விளம்பரத்தின் நோக்கமாகும்.

விளம்பரத்தின் அடிப்படைக் கூறுகள் மூன்றாகும். அவையாவன,

- அறிவுறுத்துதல்
- ஊக்கப்படுத்துதல்
- நினைவூட்டல்

புதிய பொருள்களை அறிமுகப்படுத்துவதன்மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய புதிய அனுகூலங்கள், விலை மாற்றங்கள், கிடைக்கும் சேவைகள் போன்ற விடயங்கள் அல்லது அவற்றுடன் தொடர்பான அறிவித்தல்களை வழங்கல் ஆகியன இடம்பெறும். காலதாமதமின்றி பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நுகர்வோரைத் தூண்டுதலும் வாடிக்கையாளர்களின் சந்தையில் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தலும் ஊக்குவித்தலின்கீழ் இடம்பெறும். பொருள்கள் அல்லது சேவைகள் வாடிக்கையாளர்களுக்குத் தேவையானவை என வணிகரினால் விளம்பரப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை ஞாபகப்படுத்துவதே நினைவூட்டலின் கீழ் இடம்பெறுகின்றது.

- புதிய பொருளொன்றை அல்லது சேவையொன்றைச் சந்தைக்குச் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பம்
- பொருளொன்றிற்கு அல்லது சேவையொன்றிற்கு புதிய தேவையொன்றை சேர்க்கும் சந்தர்ப்பம்
- சந்தைக்கு முன்வைக்கப்பட்டிருக்கும் பொருள் நுகர்வோரின் உள்ளத்திலிருந்து நீங்காதிருக்கும் பொருட்டு இடையிடையே நினைவூட்டுதல்

விளம்பர ஊடகங்கள்

- அச்சிடப்பட்ட பத்திரிகை அறிவித்தல்கள்
- தொலைக்காட்சியும் வானொலி அறிவித்தல்களும்
- துண்டுப் பிரசுரங்கள்
- விளம்பர அறிவித்தல் பலகை
- கவர்ச்சிகரமாக பொதியிடல்
- தொலைபேசி விவரக்கொத்து
- சுவர்ப்பத்திரிகை, பதாதைகள்
- விவரப் படிவம்
- அசைவூட்டஞ் செய்யப்பட்ட உருக்கள்
- கண்காட்சிகள்
- விற்பனைக் காட்சியகம்

ö\¯Ø£õk 4.5

- தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் வியாபார விளம்பர அறிவித்தல்களைச் சேகரித்து அவற்றை ஆராய்க.

விற்பனை மேம்படுத்தல் உபாய வழிமுறைகள் (Sales Promotion Strategies)

மிகக் குறுகிய காலப்பகுதியில் தனது விற்பனைப் புரள்வை அதிகரித்துக் கொள்ளும் நோக்குடன் வணிகர்களினால் திட்டமிடப்படும் அனைத்து உபாயமுறைகளும் விற்பனை மேம்படுத்தல் உபாய வழிமுறைகள் என அழைக்கப்படும். உத்தேச விற்பனை இலக்கினை விளம்பரத்தினூடாக மட்டுமே நிறைவுசெய்து கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் வணிகர்கள் விளம்பரங்களினூடாக குறுகிய காலப்பகுதியில் விற்பனையை அதிகரித்துக் கொள்வதற்கான உபாய வழிமுறைகளை மேற்கொள்வர்.

விற்பனை மேம்படுத்தலின் அடிப்படைக் கூறுகள் மூன்றாகும்.

- தொடர்பாடல் - நுகர்வோரின் கவன ஈர்ப்பை பொருள்மீது ஈர்த்தல்
- ஊக்குவிப்பு - நுகர்வோருக்குக் கூடிய பெறுமதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் ஊக்குவித்தல்.
- அழைப்பு - நிகழ்காலத்தில் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் அழைப்பைக் குறிக்கும்.

செயற்றிட்டத்தினூடாக விற்பனை மேம்படுத்தலை மேற்கொள்வோம்

சிற்றளவு முயற்சியாளர் எனும் வகையில் நீங்கள் முகங்கொடுக்க வேண்டிய பிரச்சினைகள் இரண்டு கீழே தரப்பட்டுள்ளன.

- ★ சந்தையை இலக்காகக் கொண்டு பொருளொன்றை அல்லது சேவையொன்றை உற்பத்திசெய்து பொருத்தமான விளம்பர ஊடகமொன்றின் மூலம் நுகர்வோருக்கு அறியச் செய்தல்.
- ★ விளம்பரம் செய்வதனூடாக விற்பனை அதிகரிப்பினும் கூட நீங்கள் எதிர்பார்த்த விற்பனை இலக்கை நோக்கிச் செல்வதற்கு முடியாத சந்தர்ப்பங்களின்போது நுகர்வோரை வணிகத்தின்பால் ஈர்த்துக்கொள்வதற்கு முற்படும் கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக்களின் குறுங்கால உபாய வழிமுறை ஒன்றையும் அதன் தகவல்களையும் தொடர்பாடல் செய்வதற்கு பொருத்தமான ஆக்கமொன்றைத் தயாரித்தல்.

- **திட்டமிடல்**

செயற்றிட்டத்தைத் தயாரிக்கும்போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனத்தைச் செலுத்தவும்

- ★ நீங்கள் அல்லது உங்கள் குழு உற்பத்திசெய்யும் பொருளுக்கான சந்தையைப் பெற்றுக் கொள்வதற்கான பிரதான விடயங்களைத் தேடியறிதல்.

உதாரணமாக,

தரம், நியமம், போட்டித் தன்மை கொண்ட ஏனைய உற்பத்தியாளர்களின் பிரதியீட்டுப் பொருள்கள் அவர்களது நடத்தைப்போக்கு, இலக்கு நுகர்வோர் குழு, விரைவாக நுகர்வோரை அடையக்கூடிய விநியோக வழிமுறைகள், ஏனைய பிரதியீட்டுப் பொருள்களின் விலை மட்டங்கள், போட்டித்தன்மை கொண்ட வணிகர்களால் பயன்படுத்தப்படும் விளம்பர ஊடகங்கள், குறுங்கால விற்பனை மேம்படுத்தல்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் உபாய வழிமுறைகள் என்பன தொடர்பான தகவல்களைச் சேகரித்தல்.

- குறுங்கால விற்பனை மேம்படுத்தல் செயல்முறைகளில் இருக்க வேண்டிய பிரதான இயல்புகளை இனங்காணல்.
- மாதிரிப் பரிசோதனையொன்றினூடாக சந்தையை ஆய்வு செய்வதற்காக வினாக்கொத்தொன்றைத் திட்டமிடல்.
- ஆக்கத்தைத் தயாரிப்பதற்காக ஒவ்வொரு செயற்பாட்டையும் செயலுருப்படுத்துவதற்கு காலத்தைப் பயன்படுத்தும் முறையைக் காட்டக்கூடிய காலச்சட்டகமொன்றை உள்ளடக்கியதாக செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரித்தல்.

பணிகளுக்கான திட்டம்

1. ஆரம்பக் கலந்துரையாடலின் பின்னர் திட்டத்தைத் தயாரித்தல்
2. சந்தை பற்றிய தகவல்களைச் சேகரித்தல்
3. விற்பனை மேம்படுத்தல் உபாயமுறை வாய்ப்புப் பார்த்தல்களைச் செய்தல்
4. செலவைக் கணிப்பிடலும் விலையைத் தீர்மானித்தலும்
5. சந்தைக்கு முன்வைக்கக்கூடிய விதத்தைத் தீர்மானித்தல்
6. முடிவுப் பொருளொன்றைத் தயாரித்தல்
7. பின்னூட்டலை மேற்கொண்டு விருத்திசார் ஆலோசனைகளை முன்வைத்தல்

- பல்வேறு விளம்பர ஊடகங்கள் தொடர்பான தகவலைச் சேகரித்தல்
- நுகர்வோரை ஈர்ப்பதற்கான திறமை கொண்ட விளம்பர அறிவித்தலொன்றில் இருக்க வேண்டிய முக்கியமான பண்புகள் தொடர்பான தகவல்களைத் தேடுதல்
- பொருத்தமான விற்பனை மேம்படுத்தல் உபாய வழிமுறையொன்றைத் தெரிவு செய்யும் பொழுது கவனத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் தொடர்பான தகவல்களைத் தேடுதல்

உதாரணமாக,

நுகர்வோரின் திருப்தி, விளம்பரத்திற்கான கிரயம், போட்டியாளர்கள் பயன் படுத்தும் விளம்பர ஊடகங்கள், இதற்கு முன்னர் தான் பயன்படுத்திய ஊடகங்கள் இருப்பின் அவற்றின் பெறுபேறு, இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய தன்மை, விளம்பரம் செய்யப்பட வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை போன்ற விடயங்கள் தொடர்பான தகவல்களைத் தேடியறிதல்

- பொருத்தமான விளம்பர ஊடகமொன்றைத் தெரிவு செய்வதற்காக விளம்பரத்தின் பண்புகளை உள்ளடக்கி, பல ஊடகங்களுக்கு முன்வைக்கும் பொருட்டு பருமட்டான மாற்று அட்டவணைகள் பலவற்றைத் திட்டமிடல்
- மாதிரியொன்றின் மூலம் சந்தை ஆய்வை மேற்கொள்ளக்கூடிய செயல்முறைகளைத் திட்டமிடல்
- முடிவுப்பொருளைத் தயாரிப்பதற்காக ஒவ்வொரு செயற்பாட்டையும் செயலுருப்படுத்துவதற்கு காலத்தைப் பயன்படுத்தும் முறையைக் காட்டும் கால அட்டவணையுடன் கூடிய செயற்பாட்டுத் திட்டத்தைத் திட்டமிடுதல்.

தீர்மானமெடுத்தல்

தனது உற்பத்திக்கான கேள்வியை ஏற்படுத்தும் நுகர்வோரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக ஏனைய போட்டியாளர்கள் பயன்படுத்தும் விற்பனை மேம்படுத்தல் உபாய வழிமுறைகளைப் பகுப்பாய்வுசெய்ய வேண்டும்.


உ+ம் :-

- இலக்கு நுகர்வாளர்கள் 25 நபர்களைக் கொண்ட மாதிரியொன்றாக ஒவ்வொரு விற்பனை மேம்படுத்தல் உபாய வழிமுறைகளுக்காக அவர்களது விருப்பங்களை பெறுபேறுகளைப் பதிவு செய்யவும்.

உ+ம் :-

★ விசேட கழிவின்மூலம் விலையைக் குறைத்தல் 08
★ விசேட கொடுப்பனவுகளை வழங்கல் 05
★ அதிஷ்டலாபச் சீட்டிழுப்பின் மூலம் பரிசு வழங்கல் 02
★ பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது மேலதிகமாகப் பொருளொன்றை வழங்கல் 10

- அந்த இருபத்தைந்து பேரினதும் விருப்புக்களைக் காட்டும் முறையிலான புள்ளி விவரங்களைப் பயன்படுத்தி பின்வருமாறு நிரல் வரைபொன்றைத் தயாரிக்க முடியும்.



விற்பனை மேம்படுத்தல் உபாய வழிமுறைகள்

இந்நிரல் வரைபைப் பயன்படுத்தி நுகர்வோர் கூடுதலாக ஈர்க்கப்படும் விற்பனை மேம்படுத்தல் உபாய வழிமுறையை இனங்காண முடியும். மேற்காட்டிய உதாரணத்திற்கமைய நுகர்வோரில் கூடுதலானோர் நான்காவது உபாய வழிமுறைக்கே விருப்பை வெளிப்படுத்தியிருப்பதனால் அதனைச் செயற்படுத்துவதற்கான தீர்மானத்தை எடுக்க முடியும்.

இவ்வாறான வகையில் ஒவ்வொரு உபாய வழிமுறை தொடர்பாகவும் செலவிடப்படும் கிரயம் தொடர்பாக ஒப்பீட்டுரீதியாக தீர்மானம் எடுக்க முடியும்.

மாற்று விற்பனை மேம்படுத்தல் உபாய முறைகளில் பொருத்தமான தீர்வை பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு தெரிவுசெய்தல் வேண்டும்.

- நுகர்வோர் ஈர்ப்பு
- விரைவாகப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு நுகர்வோரைத் தூண்டத்தக்க ஆற்றல்
- அறிவூட்டுவதற்காக முன்வைக்கப்பட்ட தரவுகளின் விளைதிறன்

விற்பனை செய்யப்படும் அலகுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு விளம்பரச் செலவை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கும் தகவல்களைச் சிறந்த முறையில் பகுப்பாய்வு செய்து தீர்மானமெடுத்தல் வேண்டும். நிலையான விற்பனை மேம்படுத்தல் உபாய வழிமுறையொன்றிற்கான வெளியீட்டை வெளியிடுவதற்கு அச்சிடல் ஊடகமா அல்லது இலத்திரனியல் ஊடகமா பொருத்தமானது என்பதனை பெரும்பான்மையானோரின் கருத்தின் அடிப்டையிலேயே தீர்மானிக்க முடியும்.

இறுதியில் அனைத்து விடயங்களையும் பகுப்பாய்வு செய்வதன்மூலம் கூடுதலான விற்பனைத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்குப் பங்களிப்புச் செய்யக் கூடியது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்ட விளைத்திறன் கொண்ட விற்பனை மேம்படுத்தல் உபாய வழிமுறையொன்றையும் ஊடகமொன்றையும் தெரிவு செய்வதற்காக தீர்மானித்தல் முக்கியமானதாகும். தயாரிக்கப்பட்ட கால அட்டவணைக்கமைய செயற்படுத்துவதற்கு இலகுவான முறையில் செயல்முறையை ஒழுங்கமைக்க வேண்டும்.

மாதிரிகள் பல தயாரிக்கப்பட்டு நுகர்வோருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அவற்றின் துலங்கல் களைக் கேட்டறிவதன் மூலம் மிகவும் கூடிய துலங்கலை ஏற்படுத்திய விற்பனை மேம்படுத்தல் உபாய வழிமுறையொன்றைத் தெரிவுசெய்வது இலகுவானதாக அமையும். அதுமட்டுமன்றி இதற்குத் தேவையான விவரக்கூறு, கிரயம் என்பவற்றின் மதிப்பீடொன்றைத் தயாரித்தல் முக்கியமானதாகும். இறுதியில் வெளியீட்டைத் தயாரிப்பதற்காக ஏற்கனவே திட்டமிடப்பட்ட பருமட்டான உருவப் படங்கள், சொற்கள் என்பவற்றைப் பயன்படுத்த வேண்டும். கணினி வசதிகள் காணப்படுமாயின் முடிவுப்பொருளைத் தயாரிப்பதற்காக அதனால் பயன்படுத்திக் கொள்ள முடியும். விற்பனையைக் குறுங்காலத்தில் அதிகரித்துக் கொள்வதற்குப் பங்களிப்புச் செய்யக் கூடியதாக இருக்கும் என்பதனை உறுதிப்படுத்திக்கொண்ட முறைக்குத் தேவையான பண்புகளை கொண்ட விவரக் கூறுகளுக்குப் பொருத்தமானதும் நிலைபேறானதுமான முடிவுப் பொருளைத் தயாரிக்க முடியும்.

பின்னூட்டல்

உங்களது முடிவுப் பொருளானது நுகர்வோர் ஈர்ப்பு, விற்பனை என்பவற்றை அதிகரிப்பதற்கு எந்தளவு வெற்றியளித்துள்ளது என்பதனை அறிந்து கொள்வதற்காக பல தினங்களில் நடந்த விற்பனையைப் பரிசீலனைசெய்ய முடியும். ஒவ்வொரு தினத்திலும் அதிகரிக்கும் அலகுகளின் எண்ணிக்கையை வீதத்தில் அளவிடுவது இலகுவானதாக அமையும்.

விற்பனை மேம்படுத்தல் உபாய வழிமுறைக்கு கணினியைப் பயன்படுத்தல்

உற்பத்தி செய்யப்படும் பொருள்களைச் சந்தைப்படுத்தும் போது அவ்வுற்பத்திகள் தொடர்பாக நுகர்வோர் குழுக்களை அறிவூட்டஞ் செய்தல் வேண்டும். இதற்காகப் பல்வேறு விளம்பர ஊடகங்கள் பயன்படுத்தப்படும். பத்திரிகை, சஞ்சிகைகள், அறிவித்தல்கள், பதாதைகள், சுவரொட்டிகள், இலத்திரனியில் ஊடகங்கள் போன்றன


முக்கியமானவையாகும். விளம்பரத்தினூடாக உத்தேச விற்பனை இலக்கை அடைய முடியாத சந்தர்ப்பங்களில் விற்பனை மேம்படுத்தல் உபாய வழிமுறைகள் பயன்படுத்தப்படும். இவற்றின்மூலம் நுகர்வோர் அதிகளவிலான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குத் தூண்டப்படுவர்.

இதேபோன்று உற்பத்தி செய்யப்பட்டு சந்தைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பொருள்களின் விற்பனையை அதிகரிப்பதற்காக சந்தை விளம்பர நடவடிக் கைகளின்போது கணினியின் உதவியுடன் பதாதைகள் நிருமாணிக்கப்படும். இவ்வாறான பதாகையொன்றை நிருமாணிப்பதற்கு பின்வரும் மென்பொருள்களை அல்லது அவ்வாறான வேறு மென் பொருள்களைப் பயன்படுத்த முடியும்.

உ+ம்:- Microsoft Office Word
LibreOffice Writer


உங்களது பாடசாலையின் கணினிக் கூடத்தில் Linux பணிசெய்முறை இருப்பின் LibreOffice Writer மென்பொருள்களைப் பயன்படுத்தலாம்.

அந்த மென்பொருளைத் திறப்பதற்காக Start ⟶ All program ⟶ LibreOffice Writer ⟶ Enter அல்லது திரையின்மீது வெளிப்படும்  குறும்வழி படவுருவின் மீது இரு தடவைகள் அழுத்தி மென்பொருளுக்குள் பிரவேசிக்க முடியும். அப்பொழுது கணினித் திரையின் மீது கீழே காட்டப்பட்டுள்ளவாறான இடைமுகம் காட்சியளிக்கும்.




LibreOffice Writer மென்பொருளின் இடை முகம்

மேலே காட்டப்பட்ட வேலைத்தளத்தின் மீது எழுத்துக்களைப் பதிப்பதற்காக விசைப்பலகையைப் பயன்படுத்தலாம். அந்த விசைப்பலகையின் மூலம் பதிக்கப் பட்ட எழுத்துக்களை பின்வருமாறு Formating Toolbar இன் துணையுடன் கோல வடிவங்களாக்க முடியும்.



Font Type - எழுத்துரு வகைகள்
Font size - எழுத்துரு அளவை ஒழுங்கமைத்தல்
Font color - எழுத்துக்ருகளுக்கு நிறமிடல்

அவ்வாறு தட்டச்சுச் செய்யப்பட்ட எழுத்துருக்களை பல்வேறு கோலங்களுக்கு மாற்றியமைப்பதற்கு Drawing Tool Bar ஐத் துணையாகக் கொள்ளலாம்.




Drawing tool bar இல் காணப்படும் Font work Gallery யில் சுட்டியினால் [A] எனும் படவுருவின் மீது அழுத்தி கீழே காட்டப்படும் Select a font word style செல்லை ல் சாளரத்தை பெறமுடியும்.



Font work மூலம் தேவையான எழுத்து வடிவங்களைத் தெரிவு செய்யவும். அவ்வெழுத்து கோலத்தின் மீது அழுத்தினால் தேவையான சொற்றொடரைத் தட்டச்சுச் செய்வதற்கான வசதி ஏற்படும். அப்பொழுது எழுதப்பட்ட எழுத்து அல்லது சொற்றொடர் தெரிவு செய்த வடிவத்திற்கமைய உருவ அமைப்பைப் பெறும்.

Insert ⟶ Picture ⟶ From file ⟶ Enter மூலம் கணினியில் காணப்படும் உருவமொன்றை உள்ளிட முடியும்.



இங்கு கிடைக்கும் சொல்லாடல் சாளரத்திற்கமைய கருமமாற்றவும். மேற்குறிப்பிடப்பட்ட முறையில் படங்களையும் அவற்றுகுப் பொருத்தமான கட்டளைகளையும் பயன்படுத்துவதன் மூலம் விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்குத் தேவையான பதாகையொன்றை இலகுவாக நிருமாணிக்க முடியும்.

4.3 பொருளொன்றின் விலையைக் கணிப்பிடுவோம்

இந்த அத்தியாயத்தைக் கற்பதனால் உங்களுக்கு,

- பொருளொன்றின் நேர், நேரில் கிரயங்களைத் தனித்தனியாக இனங்கண்டு பட்டியற்படுத்தவும்
- பொருளின் மொத்த உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடவும்
- இலாப எல்லையுடன் கூடிய விலையினைத் தீர்மானிக்கவும்

இயலுமாகும்.

உற்பத்தியொன்றின் நேர், நேரில் கிரயங்களைக் கணிப்பிட்டு விலையினைத் தீர்மானிப்போம்.

வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தி நுகர்வோரின் தேவை மற்றும் விருப்பங்களை பூர்த்திசெய்யும் முறையில் பொருள்கள், சேவைகளை உற்பத்தி செய்தல் உற்பத்தியாளரின் பிரதான பொறுப்பாகும். அவர் அவ்வளங்களின் தன்மையில் மாற்றம்செய்து அவ்வளங்களுக்குப் பெறுமானம் சேர்க்கும் கருமத்தை மேற்கொள்கின்றார்.

பொருள்கள், சேவைகளை உற்பத்தி செய்வதற்கு வளங்களே பயன்படுத்தப் படுகின்றன. இவற்றை உள்ளீடுகள் (Input) எனவும் அழைபர். இவ்வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும்போது அவற்றிற்காக செலவுசெய்ய வேண்டி ஏற்படும். அச்செலவு கூடிக் குறையும்போது பொருள்கள் சேவைகளது விலையும் கூடிக் குறையும் என நீங்கள் தரம் 7 இல் கற்றுள்ளீர்கள்.

உற்பத்திக் கிரயம்

உற்பத்தி செய்யப்படும் பொருள் அல்லது சேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு வளங்களின் அல்லது உள்ளீடுகளின் பெறுமதியே உற்பத்திக் கிரயம் என அழைக்கப்படும். இது செலவிடப்பட்ட விலைகளும் சேர்க்கப்பட்டு கணிக்கப்பட்ட பெறுமானமாகும்.

பொருள்கள் அல்லது சேவைகளை உற்பத்திசெய்யும் பொழுது செலவிடப்படும் செலவுகள் உற்பத்தியாளரால் மீளவும் அறவிட்டுக்கொள்ள முடியுமாக இருப்பின் அச்செலவு கிரயம் எனப்படும்.

உற்பத்தியின்போது செலவிடப்பட்ட கிரயத்தை இனங்காண்பதன் முக்கியத்துவம்

உற்பத்தியாளர் பொருள்கள், சேவைகளை உற்பத்தி செய்யும்போது பின்வரும் காரணங்களினால் செலவிடப்பட்ட கிரயத்தை இனங்காண்பது முக்கியத்துவ முடையதாக அமையும்.

- மொத்த உற்பத்திப் பொருளின் கிரயத்தை அறிந்து கொள்ளல்
- உற்பத்திப் பொருள்களின் அலகுக் கிரயத்தை அறிந்து கொள்ளல்
- உற்பத்திப் பொருள்களின் அலகு விலையினைத் தீர்மானித்தல்

உற்பத்திக் கிரயத்தின் கூறுகள்

உற்பத்திக் கிரயம் மூன்று கூறுகளை உள்ளடக்கியது.

1. பொருட் கிரயம்
2. கூலிக் கிரயம்
3. பொது மேந்தலைக் கிரயம்

பொருளொன்றை அல்லது சேவையொன்றை உற்பத்தி செய்யும்போது ஏற்படுகின்ற செலவுகளில் கூடுதலான அளவு மூலப்பொருளுக்கென செலவிட வேண்டி ஏற்படுவதோடு உழைப்பிற்காகவும் செலவும் ஏற்படும்.

பொருள் கிரயம், கூலிக் கிரயம் என்பவற்றிற்கு மேலதிகமாக பொருளொன்றை உற்பத்தி செய்யும்போது செலவிட வேண்டி ஏற்படும் ஏனைய செலவுகளும் உள்ளன. இவை உற்பத்தி செயன்முறைக்குச் சார்பாக செலவிட வேண்டி ஏற்படும் பொதுச் செலவுகளாக இருப்பதனால் இவற்றைப் பொது மேந்தலைக் கிரயம் என அழைப்பார்.

உதாரணமாக, கட்டடத்திற்காகச் செலுத்தப்படும் கட்டட வாடகை, சோலைவரி, காப்புறுதிக் கட்டணம், மின்சாரக் கட்டணம், போக்குவரத்துச் செலவு, உபகரணப் பராமரிப்பு போன்றவற்றிற்கான செலவுகள், உற்பத்தி அலகொன்றிற்குரியதல்லாது முழுமையான உற்பத்திச் செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்காக ஏற்படும் செலவுகளாக இருக்கும். இவ்வாறு பொதுவாக மேற்கொள்ளப்படும் கிரயமும் மொத்த உற்பத்திக் கிரயத்துடன் சேர்க்கப்படும்.

நீங்கள், செயற்றிட்ட நடவடிக்கைகளில் ஈடுபடும்போது உங்களுக்கும் இவ்வாறான செலவுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்படும்.
உ+ம்:-

1. பல்வேறு பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கான பிரயாணக் கட்டணம்
2. ஆலோசகரொருவரை அழைத்து ஆலோசனையைப் பெற்றிருப்பின் அவருக்குச் செலுத்தப்பட்ட கொடுப்பனவு

நேர் மற்றும் நேரில் கிரயங்கள் (Direct & Indirect Cost)

மேற்குறிப்பிடப்பட்ட மூன்று கூறுகளையும் கொண்ட கிரயத்தை நேர்க்கிரயம், நேரில் கிரயம் எனக் கணிப்பிட முடியும்.

மேற்சட்டை தைக்கும் தையல் நுட்பவியலாளரொருவருக்கு மேற்சட்டை தைப்பதற்கு மூலப்பொருள்களாக துணி, நூல், பொத்தான், சுட்டுத்துண்டு போன்ற பொருள்கள் அவசியமாகும். மேலும், இம்மூலப் பொருள்களைப் பொருத்தமானவாறு பயன்படுத்தி தனது அறிவு நுட்பத்திறன் ஆகியவற்றை பயன்படுத்தி வடிவமைப்புக்களை நிருமாணித்து மேற்சட்டையை உற்பத்திசெய்யும் நுட்பவியளாருக்கு உழைப்பிற்காக சம்பளம் செலுத்தப்பட வேண்டும். வணிகமானது, தனித்துவமானதாகக் காணப்படினும் கூட தனது உழைப்பிற்கான சம்பளத்தை ஒதுக்கிப் பெற்றுக்கொள்ள வேண்டும். மூலப்பொருள்களையும் உழைப்பையும் பயன்படுத்தாது மேற்சட்டை உற்பத்தி செய்யமுடியாது. மூலப்பொருள்களுக்கான செலவும் உழைப்புச் செலவும் மேற் சட்டை உற்பத்திக்கான செலவும். மேற்சட்டைகள் 10 ஐ உற்பத்தி செய்வதற்கு மூலப் பொருள்கள் எனும் வகையில் துணி, நூல், பொத்தான், ஸ்ரிப் போன்ற பொருள்களுக்கு ரூபா 2750 உம் உழைப்பிற்காக ரூபா 1750 உம் செலவும் ஏற்படுமாயின் 10 மேற் சட்டைகளுக்கான நேர் கிரயம் எனும் வகையில் இத்தொகையை செலவிட வேண்டி இருக்கின்றது. ஒவ்வொரு மேற்சட்டைக்குமென ஏற்க வேண்டிய மூலப்பொருள் செலவுகளையும் உழைப்புச் செலவுகளையும் தனித்தனியாக இனங்காணக்கூடியதாக இருப்பதே இவ்விரண்டு செலவுகளதும் விசேட அம்சமாகும்.

உ+ம்:-

10 மேற்சட்டைகளுக்கான மூலப்பொருள் செலவு ரூபா 2750 ஆக இருப்பின் ஒரு மேற்சட்டைக்கான மூலப்பொருள் செலவு (2750÷10) 275 ரூபா ஆகும். 10 மேற் சட்டைகளுக்கான தையல் கூலி ரூபா 1750 ஆக இருப்பின் ஒரு மேற்சட்டைக்கான தையல் கூலி (1750 ÷ 10) ரூபா 175 ஆகும்.

இதற்கமைய மேற்குறிப்பிட்ட உதாரணத்தில் 10 மேற்சட்டைகளுக்காகச் செலவிடப் பட்ட மூலவ் பொருள் கெவு ரூபா 2750 உடன் உழை ப்புச் கெவு ரூபா 1750 ஐயும் சேர்க்கும் பொழுது நேர்க்கிரயமாக மொத்தம் ரூபா 4500 மேற்சட்டைக்காக ஏற்பட்டுள்ளது. ஒரு மேறசட்டைக்கான நேர்கிரயம் (4500 ÷ 10) 450 ரூபா ஆகும். இதற்கமைய உற்பத்தி அலகொன்றிற்கான செலவு நேர்க்கிரயமாகும் என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

மேற்சட்டையை உற்பத்தி செய்யும்போது நேர்ச்செலவுகளுக்கு மேலதிகமாக வணிகத்தை நடாத்திச் செல்லும்போது நேரில் செலவுகளையும் மேற்கொள்ள வே ண்டி உள்ளது. வணிகத்திற்கக மின்சார க் கட்டணம், கட்டட வாடகை , சோலைவரி, மேற்சட்டைகளுக்காகப் பொருள்களைக் கொண்டு வருவதற்கு ஏற்படும் போக்குவரத்துச் செலவுகள், இயந்திரங்களைப் பராமரிக்கும் செலவு, தையல் இயந்திர தேய்விற்காக ஒதுக்கீடு செய்தல் என்பன இவ்வாறான செலவுகளுக்கான

உதாரணங்களுட் சிலவாகும். இவையும் உற்பத்தி நடவடிக்கைகளுக்குரியனவாக இருப்பதனால் உற்பத்திக் கிரயத்துடன் சேர்க்கப்படும். இச்செலவுகள் நேரடியாக ஒவ்வொரு அலகுக்குமுரியது என இனங்காண முடியாது. மேற்குறிப்பிடப்பட்ட உற்பத்தியின்போது செலவிடப்பட்ட மொத்த நேரில் கிரயப் பெறுமானம் ரூபா 2500 ஆகும்.

நேர், நேரில் கிரயங்களைக் கணிப்பிடும் அட்டவணையின் மாதிரிப் படிவம்

செலவுகள்	ரூபா	ரூபா
மூலப் பொருள் செலவுகள்	XXXX	
கூலிச் செலவுகள்	XXXX	XXXXX
நேரில்கிரயம் (உதாரணங்கள் சில)		
வீட்டு வாடகை	XXX	
மின்கட்டணம்	XXX	
போக்குவரத்துச் செலவுகள்	XXX	
உபகரணச் செலவுகள்	XXX	
இயந்திர பெறுமானத் தேய்வு	XXX	
உபகரணப் பராமரிப்புச் செலவுகள்	XXX	
எண்ணெய், வாயு போன்றவற்றுக்கான செலவுகள்	XXX	XXXX
மொத்த உற்பத்திக் கிரயம்		XXXX

மொத்த உற்பத்திக் கிரயம்

அனைத்து உற்பத்தி அலகுகளுக்குமெனச் செலவிடப்பட்ட மொத்தச் செலவு மொத்த உற்பத்திக் கிரயமாகும்.

மொத்த உற்பத்திக் கிரயம் = நேர்க்கிரயம் + நேரில் கிரயம்

மேலே குறிப்பிடப்பட்ட 10 மேற்சட்டைகளுக்காகச் செலவிடப்பட்ட நேர்க்கிரயம் ரூபா 4500 ஆகவும் நேரில் கிரயம் ரூபா 2500 ஆகவும் இருப்பின் மொத்த உற்பத்திக் கிரயம் (4500 + 2500) ரூபா 700 ஆகும்.

அலகுக்கான உற்பத்திக் கிரயம்

மொத்த உற்பத்திக் கிரயத்தை உற்பத்தி செய்யப்பட்ட அலகுத் தொகையினால் வகுப்பதன் மூலம் ஓர் அலகுக்காக செலவிடப்பட்ட உற்பத்திக் கிரயம் பெறப்படும்.

மேற்சட்டையொன்றின் உற்பத்திக் கிரயம் = $\dfrac{\text{மொத்த உற்பத்திக் கிரயம்}}{\text{மேற்சட்டைகளின் எண்ணிக்கை}}$

மேற்சட்டை அலகொன்றிற்கான கிரயம் = ரூபா $\dfrac{7000}{10}$

= ரூபா 700.00 ஆகும்.

விலையினைத் தீர்மானித்தல்

அலகுக் கிரயத்துடன் வணிகரினால் எதிர்பார்க்கப்படும் இலாப வீதத்தைச் சேர்ப்பதன் மூலம் அலகு விலையைத் தீர்மானிக்க முடியும்.

மேற்சட்டையொன்றிற்கான உற்பத்திக் கிரயத்தின் *20%* இனை இலாபமாகப் பெறுவதற்கு தையல் நுட்பவியலாளர் தீர்மானிப்பாராயின் மேற்சட்டையொன்றின் விலையைப் பின்வருமாறு தீர்மானிக்கலாம்.

இலாப எல்லை = ரூபா 700 × $\dfrac{20}{100}$

= 1. 140

பொருளின் விலை = உற்பத்திக் கிரயம் + இலாப எல்லை

= 1. 700 + 1. 140

= 1. 840.00

கிரயத்தைக் குறைத்துக் கொள்ளக் கூடிய முறைகள்

- உற்பத்தியின் தரத்தன்மைக்குப் பொருத்தக் கூடியதாக அமைவதற்குத் தேவையான உள்ளீடுகளை மட்டும் கொள்வனவு செய்தல்
- மூலப்பொருள்களைக் கொள்வனவு செய்யும்போதும் உற்பத்திக்குப் பயன் படுத்தும்போதும் விளைதிறன் உச்சமாகும் வகையில் அவற்றைப் பயன் படுத்துதல்
- ஊழியர்களின் காலத்தை வீண்விரயமாக்காதவாறு அவர்களது உழைப்பை விளைதிறனாகப் பயன்படுத்தல்
- சிறந்த தொழினுட்ப முறைமையைப் பயன்படுத்தல்
- தேவையற்ற ஏனைய செலவுகளைத் தவிர்த்தல்
- கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை மேற்கொள்ளல்

கிரயத்தைக் குறைத்துக் கொள்வதன்மூலம் கிடைக்கும் அனுகூலங்கள்

- விலையைக் குறைத்துக்கொள்ள முடியும்
- வாடிக்கையாளர்களை ஈர்க்க முடியும்
- வணிகத்தின் விற்பனையை அதிகரிப்பதன்மூலம் இலாபம் அதிகரித்து முழுமையான வணிகமும் விருத்தியடையும்.

ö\¯Ø£õk 4.5

நீங்கள் உற்பத்திசெய்த பொருளொன்றைத் தெரிவுசெய்து அவற்றிற்குப் பயன்படுத்திய பொருள்களின் பட்டியலொன்றைத் தயாரிக்கவும்.

- நீங்கள் ஈடுபடுத்திய உழைப்பிற்கான கூலியைத் தீர்மானிக்கவும்
- பொருளை உற்பத்தி செய்யும்போது பயன்படுத்திய பொருள்கள் மற்றும் உங்களது கூலிகள் தவிர்ந்த உங்களால் செலவிடப்பட்ட ஏனையன பொதுக் கிரயம் எவை என்பதை அறிந்து அவற்றையும் பட்டியற்படுத்தவும்.
- பொருட் கிரயத்தை காட்டவும்
- உழைப்பிற்காக ஒதுக்கப்பட்ட தொகையையும் அதனுடன் சேர்க்கவும். அதனை நேர்க் கிரயம் எனப் பெயரிடுங்கள்.
- பொருள் கிரயத்துடன் வேறுபடுத்தி இனங்காண முடியாத செலவுகளாக பொதுச் செலவுகளைச் சேர்த்து அதனை நேரில் செலவுகள் எனப் பெயரிடுங்கள்.

    - நேர்க் கிரயம் + நேரில் கிரயம் = மொத்தக் கிரயம்

$$\frac{\text{மொத்த உற்பத்திக் கிரயம்}}{\text{உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை}} = \text{அலகுக்கான உற்பத்திக் கிரயம்}$$

இலாப எல்லையைத் தீர்மானிக்கவும். இதனை அலகுக்கிரயத்துடன் சேர்த்து விலையினைத் தீர்மானிக்கவும்.

அலகுக் கிரயம் + இலாப எல்லை = பொருளின் விற்பனை விலையாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.